இலக்கு
GLOBAL TAMIL MEDIA CENTRE
வாராந்த மின்னிதழ்

Ilakku2009@gmail.com www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1

இதழ் 243 | சனி, ஜூலை 15, 2023 | 15 பக்கங்கள்


# 13 ஐ நடைமுறைப்படுத்த கோருவது



# தமிழ்த் தேசியக் கட்சிகளின் இயலாமையின் வெளிப்பாடு

அரசியல் ஆய்வாளர் **யோதிலிங்கம்** செவ்வி



# கொக்குத்தொடுவாய் புதைகுழி!

# சரணடைந்தவர்களின் எச்சமா?


அகிலன்



© 2023 இலக்கு இணையம்

# பிரித்தானியா – நூல் அறிமுக விழா



பிரித்தானியாவில், ஓவியர்புகழேந்தி அவர்களின் "தமிழீழம்" ஒளிப்பட வரலாறு நூல் அறிமுக விழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகின்றது

# உலகின் புதிய தொழில்நுட்பத்திலான செய்மதியை சீனா விண்ணில் ஏவியது

உலகில் உள்ள நாடுகளோ அல்லது நிறுவனங்களோ பயன்படுத்தாத புதிய தொழில் நுட்பத்தில் வடிவமைக்கப் பட்ட செய்மதி ஒன்றை சீனாவின் *Land-Space* என்ற தனியார் நிறுவனம் கடந்த புதன்கிழமை (12) விண்ணில் ஏவியுள்ளது.



மீதேன் மற்றும் திரவமாக் கப்பட்ட ஒக்சிசன் எரிசக்தி தொழில் நுட்பத்தில் இயங்கும் இந்த செய்மதி ரெஸ்லா நிறுவனத்தின் *SpaceX* செய்மதி செயற்திட்ட தொழில்நுட்பத்திலும் இல்லாதது என்பதுடன் உலகில் உள்ள எந்த நாடுகளோஅல்லதுநிறுவனங்களோ அதனை கொண்டிருக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

சீனாவின் கன்சூ மாநிலத்தில் இருந்து ஏவப்பட்ட இந்த செய்மதி *Zhuque-2* என்ற செயற்கைகோளை 500 கி.மீ தூரத்தில் உள்ள சுற்றுப் பாதையில் 750 வினாடிகளில் கொண்டு சென்று சேர்த்துள்ளது. தற்போது பயன்படுத்தப்பட்ட எரிபொருள்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# தமிழ் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ள மனித புதைகுழி

## செல்வராசா கஜேந்திரன்

1984 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிகின்ற வரைக்கும் சிறிலங்கா இராணுவத்தினருடைய முழுமையான ஆக்கிரமிப்பு பிரதேசமாக இருந்த கொக்குத்தொடுவாய் பகுதியிலே மனிதப் புதைகுழி கண்டெடுக்கப்பட்டதென்பது தமிழ் மக்கள் மத்தியிலேயே அச்சத்தை - பதட்டத்தை ஏற்படுத்தி இருப்பதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செ. கஜேந்திரன் தெரிவித்தார்.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# இலங்கையின் பொருளாதார நெருக்கடி– சுகாதாரம், போசாக்கு என்பன பின்னடைவு

இலங்கை அரசாங்கம், அனைத்து கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு, போதியளவு ஊட்டச்சத்து கிடைப்பதை கட்டாயமாக உறுதிசெய்ய வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்துகிறது.

குறித்த விடயம் தொடர்பான தமது புதிய ஆய்வு தொடர்பில், வெளியிட்டுள்ள அறிக்கையில், சர்வதேச மன்னிப்புச் சபை இவ்வாறு வலியுறுத்தியுள்ளது.

வீழ்ச்சியடைந்த வருமானம், வாழ்வாதார இழப்பு மற்றும் பணவீக்கம் என்பன, பெண்களின்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# பிரான்ஸ் வன்முறை - காப்புறுதி நிறுவனங்களுக்கு 650 மில்லியன் ஈரோக்கள் இழப்பு

கறுப்பு இனத்தவரான இளைஞர் ஒருவரை பிரான்ஸ் காவல் துறையினர் சுட்டு படுகொலை செய்த சம்பவத்தை தொடர்ந்து 10 நாட்களாக பிரான்ஸில் இடம்பெற்ற வன்முறைகளில் இதுவரை 11000 இற்கு மேற்பட்ட சேதமடைந்த நிறுவனங்கள் மற்றும் உடைமகைளுக்கான இழப்பீடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அவற்றின் பெறுமதி 650 மில்லியன் ஈரோக்களாகும்.

இங்கு இடம்பெற்ற கலவரங்களில் 3900 இற்கு மேற்ட்ட நிறுவனங்கள் சேதமடைந்துள்ளன. இது அங்கு சேதமடைந்த நிறுவனங்களில் 55 விகிதமாகும். சேதமடைந்த நிறுவனங்கள் தமது இழப்பீடுகளுக்கான தொகையை பெறுவதற்கு வசதியாக காப்புறுதி



நிறுவனங்கள் விண்ணப்ப காலத்தை நீடிக்கவேண்டும் என பிரான்ஸின் நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 27 ஆம் நாள் அல்ஜீரியாவை பூர்வீகமாக கொண்ட 17 வயது சிறுவன் பிரான்ஸ் காவல்துறையினரால் சுட்டு படுகொலை செய்யப்பட்டதை தொடர்ந்து அங்கு வன்முறைகள்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# எந்தவொரு மூன்றாம் தரப்பினரையும் குறிவைக்கவில்லை - சீனா



இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கு சீனா தனது இயலுமைக்குள் தொடர்ந்து ஒத்துழைப்புகளை வழங்குவதில் உறுதியாக உள்ளது. அந்த வகையில் இலங்கையுடனான சீனாவின் பரஸ்பர நன்மை பயக்கும் ஒத்துழைப்புகள் எந்தவொரு மூன்றாம் தரப்பினரையும் குறிவைக்கவில்லை என சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் வோங் வென்பின் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# மத நூல்களை எரிப்பது கருத்து சுதந்திரம்– அமெரிக்கா





சுவீடனில் முஸ்லீம்களின் புனித நூலான குரானை எரித்தது தொடர்பிலான கண்டனத் தீர்மானம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் கடந்த புதன்கிழமை (12) நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த தீர்மானத்துக்கு ஆதரவாக ஆசிய, ஆபிரிக்க மற்றும் அரபு நாடுகள் வக்களித்திருந்தன ஆனால் அமெரிக்கா மற்றும் பிரித்தானியா உட்பட மேற்குலக நாடுகள் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்திருந்தன. வேறு சில நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

கடந்த மாதம் சுவீடனின் தலைநகரில் உள்ள பள்ளிவாசலுக்கு முன்பாக மூஸ்லீம் மக்களின் மத நூல் எரிக்கப்பட்டதை தொடர்ந்து

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# உக்ரைனை நேட்டோவில் இணைப்பதற்கு அமெரிக்கா மறுப்பு




லித்துவேனியாவின் தலைநகர் வில்னிஸில் கடந்த 11 ஆம் நாள் ஆரம்பமாகிய நேட்டோ கூட்டமைப்பின் கூட்டத்தொடருக்கு உக்ரைனின் அதிபர் வொலமிடீர் செலன்ஸ்கி அழைக்கப்பட்டிருந்தபோதும், உக்ரைனை நேட்டோ கூட்டமைப்பில் இணைப்பதற்கு அமெரிக்கா உட்பட பல உறுப்பு நாடுகள் மறுப்பு தெரிவித்துள்ளன.

நேட்டோவில் இணைவதற்குரிய நிபந்தனைகளை உக்ரைன் எட்டவில்லை என இந்த கூட்டத்தில் கலந்துகொண்ட அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார். எனினும் ரஸ்யா மீதான தடையை அதிகரிப்பதுடன், உக்ரைனுக்கானநவீனஆயுதங்களை

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

ஆசிரியர் தலையங்கம்

# சொந்த நாட்டிலேயே தமிழர்களுக்கு வழிபாட்டுரிமை மறுக்கப்படும் அவலம்

## எத்தகைய கொடிய அரசின்கீழ் தமிழர்கள் வாழ்கிறார்கள் என்பதை உலகநாடுகள் பார்க்க வேண்டும்

### ரவிகரன்

எங்களுடைய இடத்தில், எமது மக்கள், தமது வழிபாட்டினை மேற்கொள்ளமுடியாத நிலை காணப்படுகிறது எனவும், குருந்தூர்மலையில் தமிழ் மக்களுடைய வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டுள்ளதாகவும் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.



இந் நிலையில் எத்தகைய கொடிய அரசின்கீழ் எமது தமிழ் மக்கள் வாழ்கின்றார்கள் என்பதை உலகநாடுகள் பார்க்கவேண்டும் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், பௌத்த பிக்குகளும், பெரும்பான்மை இனத்தவர்களும் பெருமளவில் குருந்தூர்மலைப் பகுதிக்கு வருகைதந்திருந்தனர்.

நாம் பொங்கல் வழிபாடுகளுக்குரிய செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தபோது, பெரும்பான்மை இனத்தவர்களும், பௌத்த தேரர்களும் எமது பொங்கல் வழிபாட்டுக்குரிய செயற்பாடுகளைக் குழப்புகின்றவகையில் செயற்பட்டனர்.

இந்நிலையில்அங்குகடமையிலிருந்தபொலிசார் வெறுமனே வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்ததை அவதானிக்கக்கூடியவாறு இருந்து.

இந் நிலையில் குறித்த இடத்திற்கு வருகை தந்த

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# முன்னர் மொழி பிரச்சினையாக இருந்தது, தற்போது மதம் பிரச்சினையாக மாறி வருகின்றது

### பா.உ-சித்தார்த்தன்



முன்னர் இந்த நாட்டிலே இது ஒரு மொழி பிரச்சினையாக இருந்தது, தற்போது மதப் பிரச்சினையாக மாறிக் கொண்டு வரும் நிலையை இராணுவம் மற்றும் காவல்துறையினர் உருவாக்குகின்றார்கள். இவர்கள் இதனை வேண்டுமென்றே உருவாக்குகின்றார்கள் என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

இலக்கு

# இறைமை பாதிப்புள்ளான நிலையில் வாழவியலாது தவிக்கும் ஈழத்தமிழர்களுக்கு உலகே உடனுதவு

கும்பிடும் கடவுளுக்குப் பொங்கலிடவும் உரிமையற்ற நிலையில், வழிபாட்டுச் சுதந்திரம் ஒன்று கூடும் சுதந்திரம் என்பன மறுக்கப்பட்டுத், தங்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலான சொந்த மண்ணில், பாதுகாப்பான முறையில் தீமூட்டி அரிசி பொங்கும் நாளாந்த வாழ்வுக்கான மண்ணின் மேலான இறைமையும் கூட இல்லாத அடிமை நிலையை ஈழத்தமிழர்கள் அடைந்து விட்டனர்.

இதற்கு நேற்று வெள்ளிக்கிழமை 14.07.2023 அன்று குருந்தூர் மலையில் வெலிஓயா சம்புமல்தன்ன விகாரையின் விகாராதிபதி கல்கமுவ சாந்தபோதி தேரர், தமிழரின் இந்துமாக்கடல் நகரங்களில் ஒன்றான முல்லைத்தீவின் தண்ணீரூற்றுப் புகுதியில் அமைந்துள்ள தொன்மை மிகு முருகவழிபாட்டு மலையான குருந்தூர் மலையில், அதனை ஆக்கிரமித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற இடைக்காலத் தடையுத்தரவையும் மீறி வலுக்கட்டாயமாகத் தான் கட்டியுள்ள குருந்தி விகாரையின் விகாராதிபதியாகத் தன்னையே பிரகடனப்படுத்திப், பேருந்துகளில் சிங்களக் காடையர்களையும் மதவெறி இனவெறிப் பிக்குகளையும் கொண்டு வந்து இறக்கி, அங்கு வழமைபோல வெள்ளிக்கிழமைப் பொங்கலிட்டு முருகனை வழிபடச் சென்ற ஈழத்தமிழர்கள் மேல் நடாத்திய, பண்பாட்டு இனஅழிப்பினை மேற்கொள்ளும் நோக்கிலான, அனைத்துலகச் சட்டங்களுக்கு எதிரான மனித உரிமைகள் வன்முறைகள், உலகநாடுகளினதும் அனைத்துலக அமைப்புக்களதும் கவனத்துக்குக் கொண்டு வரப்பட வேண்டிய பாரதூரமான உலக அரசியல் விடயமாக உள்ளது.

அது மட்டுமல்ல சுவீடனில் புனித குரானின் பிரதியொன்றை இஸ்லாமிய மக்களின் மனதைப் புண்படுத்தக் கூடிய விதத்தில் தனிநபர் ஒருவரால் துருக்கித் தூதுவராலயத்துக்கு முன்னால் எரிக்கப்பட்டதற்கு ஐக்கிய நாடுகள் சபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கையிலேயே, சைவத்தமிழர்களுக்கு மட்டுமல்ல உலகின் அனைத்து மதத்தினருக்கும் பொதுவான இயற்கை வடிவிலும், ஒளிவடிவில் இறைவனைத் தொழுதிட பாதுகாப்பான முறையில் கொளுத்தப்பட்ட கற்பூர ஒளியைச் சிறிலங்காவின் பொலிஸ் அதிகாரி தனது சப்பாத்துக்காலால் மிதித்து தமிழரின் மனதைப் புண்படுத்தும் நோக்கில் அவமானப்படுத்தியமையையும் இந்தியா ஐக்கிய நாடுகள் சபைக்கு முன்னெடுத்து அதனைக் கண்டிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றச் செய்ய வேண்டும். இந்தியா இதனைச் செய்யாத இடத்தில் தமிழர்கள் அதிக அளவில் வாழும் நாடுகளில் உள்ள உலகத் தமிழர்கள் இதனை உலக மக்கள் மயப்படுத்தி நாளாந்த வாழ்வை வாழ இயலாத அளவுக்கு தங்கள் வரலாற்றுக்கு முன்னான காலம் முதலான சொந்த மண்ணில் மண் மீதான இறைமைப் பாதிப்புக்குள்ளாகியுள்ள ஈழத்தமிழர்களுக்கு உடன் உதவுங்கள் எனக் கேட்க வேண்டிய தாயகக்கடமைப் பொறுப்பில் உள்ளனர் என்பதை வலியுறுத்திக் கூற வேண்டிய நேரமிது.

அதுமட்டுமல்ல 1983 இல் இதே யூலை மாதத்தில், எவ்வாறு அரசபயங்கரவாதத்தைச் சிறிலங்கா அரசாங்கம் தனது படையினர் மூலமாக முன்னெடுத்துச் சிங்கள இனவெறி மதவெறிக் கும்பல்களை வாகனங்களில் கொண்டு வந்து இறக்கி ஈழத்தமிழர்களின் சொத்துக்களைக் கொள்ளையிடவும் தொழில் மற்றும் வர்த்தக நிலையங்களை எரித்து அவர்களின் பொருளாதாரத்தை அழித்து அவர்களின் வாழ்வை வாழாதபடி வடக்கு கிழக்குக்குத் தான் உங்கள் மண் அங்கு போங்களென அகதிகளாக விரட்டி இனஅழிப்பின் மூலம் ஆயிரக்கணக்கானவர்களை இனப்படுகொலைகளைச் செய்து அவர்களின் சொத்துக்களைக் கொள்ளையிட்டுத் தமதாக்கினரோ, அதே போல் நாற்பது ஆண்டுகளின் பின்னரும் அதே அரசபயங்கரவாதத்தின் மூலம் அவ்வாறே மதவெறி இனவெறிக் கும்பல்களைப் பேருந்துகளில் கொண்டு வந்து இறக்கி தமிழர்களின் தாயகமென அன்று அவர்களே ஈழத்தமிழர்களை விரட்டியடித்த அந்த ஈழத்தமிழர்களின் தமிழீழத் தாயகத்தின் உள்ளேயே, சிங்கள பௌத்த மரபுரிமைக்குரிய பகுதியென்ற வரலாற்றுத் திரிபுவாதத்தின் மூலம், தமிழர்களின் நாளாந்த வாழ்வை இனஅழிப்புக்கும் பண்பாட்டு இனஅழிப்புக்கும் உள்ளாக்கும் ரணில் ராசபக்ச கூட்டொருங்கு தலைமையிலான இன்றைய சிறிலங்கா ஆட்சியாளர்கள், ஈழத்தமிழர்களின் வழிபாட்டுச் சுதந்திரத்தை மட்டுமல்ல உயிர் வாழும் உடைமைகளை வைத்திருக்கும் நாளாந்த வாழ்வை வாழும் அடிப்படை மனித உரிமைகளைக் கூட நிலத்தை ஆக்கிரமிப்புச் செய்யும் செயற்பாட்டால் குருந்தூர் மலை முதல் ஈழத்தமிழர் தாயகம் எங்கும் பண்பாட்டு இனஅழிப்பின் மூலம் இல்லாதொழிக்கும் தங்கள் இனஅழிப்பு அரசியலை வேகப்படுத்தி வருகின்றனர்.

இதனை ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்திற்கு கொண்டு வர வேண்டிய பொறுப்புடைய இந்துமதப் பண்பாட்டுப் பாதுகாப்பாளராகவும், இலங்கையில் தமிழர்களின் கண்ணியமான வாழ்வுக்கு தனது இந்திய இலங்கை 1987ம் ஆண்டின் உடன்படிக்கையின் அடிப்படையில் 13வது திருத்தத்தினை நடைமுறைப்படுத்தி உதவும் பொறுப்பைத் தமதாக்கி, ஈழத்தமிழர்களுக்கான அனைத்துலக அமைப்புக்களதும் அனைத்துலக நாடுகளதும் ஈழத்தமிழர்களின் வெளியக தன்னாட்சி உரிமையின் அடிப்படையிலான தங்கள் அனைத்துலகச் சட்டக் கடமைகளைச் செய்ய விடாது தடுத்து நிற்கும், இந்திய துணைக்கண்ட பிராந்திய மேலாண்மையாகத் தன்னை முன்னிலைப்படுத்தும், பாரதிய ஜனதாக் கட்சியின் இந்தியப் பிரதமரான நரேந்திர மோடி அவர்களையும் இந்திய ஜனாதிபதி உட்பட இந்திய வெளிவிவகார அமைச்சர் நிதியமைச்சர் பாதுகாப்பு அமைச்சர்களையும் இவ்வாரத்தில் சிறிலங்கா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவும் அவரது பிரதமர் தினேஸ்குணவர்த்தனாவும் அவர்களது உயர்மட்டக் குழுவினருடன் சந்திக்க புதுடில்லிக்கு இந்திய அரசால் அழைக்கப்பட்டுச் செல்லுகையில் இந்தியா என்ன செயய்ப் போகிறது என்பது முக்கியமான எதிர்பார்ப்பாக உள்ளது.

மூவாயிரம் கோடி இலங்கை ரூபா செலவில் வடக்குக்கான புகையிரதப் பாதையைச் செப்பனிட்டு கடந்த வாரத்தில் வேகப்புகையிரதம் ஓட வழி செய்துள்ள இந்தியா ஈழத்தமிழர்களின் இறைமையைப் பாதுகாப்பதற்கான வீதிவரைபையும் அமைத்து ஈழத்தமிழர்களது தொன்மையையும் தொடர்ச்சியையும் பேணுவதன் மூலம் தமிழக ஈழ உறவாடலால் தனது பாதுகாப்பையும் வளர்ச்சிகளையும் மேலும் உறுதிப்படுத்த வேண்டுமென்பதே உலகத்தமிழர்களின் நியாயமான எதிர்பார்ப்பாக உள்ளது. இவ்வாண்டு மார்ச் 18 இல் புதுடில்லியில் சிறிலங்காவின் கட்டிட வரைவுக் கலைஞர் ஜிவ்வொறி பாவாவின் வரைபடக்கலைக் கண்காட்சியினை தொடக்கி வைத்துப் பேசுகையில் "இரத்தம் தண்ணீரைவிடத் தடித்தது" என்பதற்கு உதாரணமாக இந்தியா அதன் பொருளாதார நெருக்கடி நேரத்தில் சிறிலங்காவுக்கு உதவிய முதல் நாடாகத் திழக்கிறது என உலகுக்கு எடுத்துரைத்தார். இந்த ஊக்கப்படுத்தல்கள் வழி இன்று இந்தியாவுக்கு அயலவர்களுக்கு முன்னுரிமை என்ற இந்திய வெளிவிவகாரக் கொள்கையின் அடிப்படையில் தனக்கான பொருளாதார பாதுகாப்பு உதவிகளை பெறச் செல்லும் சிறிலங்காவின் தலைமைகளுக்கு தமிழ் அமைச்சர்களாகவும் சிவாச்சாரிய மரபில் இந்து மதத்தைக் காக்கும் மரபுரிமையுள்ளவர்களாகவும் உள்ள வெளிவிவகார அமைச்சர் எஸ் ஜெயசங்கர் அவர்களும் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களும் தங்கள் தமிழினத்துக்கு தங்கள் சைவமரபுக்குச் சிறிலங்கா எவ்வித அச்சமுமின்றி ஏற்படுத்தி வரும் பண்பாட்டு இனஅழிப்பு அவர்களது இரத்தம் தண்ணீரைவிடத் தடித்தது என்ற தமிழக ஈழத் தொப்புள் கொடியுறவை மீட்டுருச்செய்து சிங்களத் தலைமைகளுடன் இரத்த உறவாடல் எந்த அளவுக்கு அவர்கள் அதிகாரத்தில் இருப்பதால் இந்தியாவுக்கு முக்கியமானதாக உள்ளதோ அதைவிட ஈழத்தமிழர்களின் தமிழகத் தமிழர்களின் தொப்புள் கொடியுறவு போற்றப்படுவது இந்தியாவுக்கு அதிகாரம் இருந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன அதன் பாதுகாப்புக்கும் வளர்ச்சிக்கும் பிரிக்க இயலாத சொத்தாக ஈழத்தமிழர் உள்ளனர் என்ற உண்மையை மத்திய அரசுக்குப் பலமாக எடுத்துரைக்க இரு தமிழமைச்சர்களையும் தூண்டும் என்பது இலக்கின் எதிர்பார்ப்பாகவுள்ளது. இந்திய சிறிலங்கா இரத்த உறவாடல் இரத்தம் சிந்தி உலகுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள ஈழத்தமிழரின் இறைமைக்கு எந்தப் பாதிப்பும் இல்லாத வகையில் அமையச் செயற்பட வேண்டிய பொறுப்புள்ளவர்களாக இந்த இருதமிழ் அமைச்சர்களும் உள்ளனர் என்பதும் இலக்கின் எண்ணமாக உள்ளது.

**ஆசிரியர்**



# கொக்குத்தொடுவாய் புதைகுழி! சரணடைந்தவர்களின் எச்சமா?

அகிலன்

இறுதிப் போர் நடைபெற்ற முள்ளிவாய்க்காலின் அருகே மீண்டும் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும் பல இடங்களில் புதைகுழிகள் இருக்கலாம் என்ற சந்தேகத்தை இந்தச் சம்பவம் ஏற்படுத்தியிருக்கின்றது. கொக்குத்தொடுவாயில் கடந்த வாரம் கண்டுபிடிக்கப்பட்ட இந்தப் புதைகுழியிலிருந்து 13 பேருடைய சிதைவுகள் மீட்கப்பட்டுள்ளன. அங்கு காணப்பட்ட உடைகள் மற்றும் எலும்புகளின் பாகங்களின் அடிப்படையில் இவை பெண் போராளிகளுடையதாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

இவர்கள் யார்? எவ்வாறு கொல்லப்பட்டார்கள்? எவ்வாறு இந்த பாரிய புதைகுழியில் யாரால் போடப்பட்டு மூடப்பட்டார்கள்? இவற்றுக்குப் பொறுப்புக் கூறப்படுமா? இவை தான் இப்போது எழும் கேள்விகள்.

இந்த நிலையில்தான் சாவதேச கண்காணிப்பில், சர்வதேச நியமங்களுக்கு உட்பட்டதாக புதைகுழி தோண்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை தமிழ்த் தரப்பினரால் முன்வைக்கப்படுகின்றது. இல்லையெனில், இதன் பின்னணி குறித்த தகவல்கள் மூடிமறைக்கப்பட்டுவிடலாம்.

இறுதிப் போர் இடம்பெற்ற காலப்பகுதியில்தான் இவர்கள் கொல்லப்பட்டிருக்க வேண்டும் என்பது பொதுவான கருத்து. இறுதிப் போரில் இடம்பெற்றது ஒரு இனப்படுகொலை என்பதைத்தான் சர்வதேச அரங்கில் தமிழர் தரப்பு வலியுறுத்திவருகின்றது. அதனை உறுதிப்படுத்துவதற்கான ஆதாரங்களில் ஒன்றாக இது போன்ற புதைகுழிகள் தொடர்பான விசாரணைகள் உதவலாம். நீதிமன்ற விசாரணைகள் மூலமாக மட்டும் நீதியை நிலைநாட்டிவிட முடியாது. கடந்த கால உதாரணங்கள் இதனைத்தான் உணர்த்துகின்றன.



இறுதிப் போரின் போது சரணடைந்த, கைது செய்யப்பட்ட பெருந்தொகையான பொதுமக்களும், போராளிகளும் காணாமல் ஆக்கப்பட்டார்கள். இவ்வாறு படையினரால் கொண்டு செல்லப்பட்டு இன்னும் திரும்பி வராதவர்களை அவர்களுடைய உறவினர்கள் இப்போதும் தேடிவருகின்றார்கள். அவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய புதைகுழியாக இது இருக்கலாமா என்பதும் இன்று எழும் கேள்வி.

### புதைகுழிகள்

இலங்கை அரசாங்கத்தினால் இந்தப் புதைகுழிகள் தோண்டப்படுவதும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதும் கொல்லப்பட்டவர்களுக்கு ஒரு போதும் நீதியைப் பெற்றுத்தராது என்பதும் அனைவருக்கும் தெரியும். இதற்கு கடந்தகால அனுபவங்களும் சான்றாக உள்ளன. மிருசுவிலில் எட்டு பொதுமக்களுடைய படுகொலைகள். திருமலை குமாரபுரத்தில் 26 பொதுமக்களுடைய படுகொலைகள் யாரால் செய்யப்பட்டன என்பது தெரிந்திருந்தும்கூட, நீதி நிலைநாட்டப்படவில்லை.

இராணுவ ஆக்கிரமிப்பையடுத்து மிருசுவிலிலிருந்து உடுப்பிட்டிக்கு இடம்பெயர்ந்த சில அகதிகள் தமது வீடுகளையும், உடமைகளையும் பார்ப்பதற்காகவும் அங்குள்ள காட்டில் விறகு வெட்டி வரவும் உள்ளூர் அதிகாரிகளிடம் இருந்து அனுமதி பெற்று 2000 டிசம்பர் 19 ஆம் திகதி மிருசுவிலுக்குச் சென்ற வேளை அரைகுறையாக புதையுண்ட நிலையில் இளம்பெண் ஒருவரின் சடலத்தை கண்டனர். அவர்களுள் சிலர் தமது குடும்பத்தவர்களுடன் இத் தகவலை பகிர்ந்து கொண்டுமிருந்தனர். அடுத்த நாள் அதே பகுதிக்குச் சென்று குறித்த சடலத்தை அடையாளங் காண முற்பட்டவேளை அங்கு நிலை கொண்டிருந்த இராணுவத்தினரிடம் அகப்பட்டுக் கொண்டார்கள்.

இவர்களுள் எட்டுப் பேர் படுகொலை செய்யப்பட்டு அப்பகுதியிலுள்ள வீடு ஒன்றின் மலசலகூடக் குழியினுள் வீசப்பட்டனர். கைதானவர்களில் பொன்னுத்துரை மகேஸ்வரன் என்பவர் பலத்த காயங்களுடன் தப்பி வந்து தனது உறவினர்களுக்குத் தகவல் கொடுத்ததை அடுத்தே இக்கொலைகள் பற்றிய விபரங்கள் தெரியவந்தது. அவர் வழங்கிய தகவலிலேயே படுகொலை செய்யப்பட்டவர்களது சடலங்கள் மலசலகூட குழியிலிருந்து மீட்கப்பட்டன.

### கிடைக்காத நீதி

எட்டு தமிழர்களின் கழுத்தை அறுத்து படுகொலை செய்த, இராணுவச் சிப்பாய் சுனில் ரத்னநாயக்க என்பவருக்கு கொழும்பு நீதிமன்றம் 2015 ஜூன் 25 அன்று மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டிருந்த நான்கு இராணுவத்தினரை போதிய ஆதாரமின்மையால் விடுதலை செய்வதாக நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். மரண தண்டனை விதிக்கப்பட்ட சுனில் ரத்நாயக்கவை 2020 மார்ச் 26 இல் கோட்டாபய ராஜபக்ஷ மன்னிப்பளித்து விடுதலை செய்தார்.

திருமலை, குமாரபுரம் கிராமத்தில் கடந்த 1996ஆம் ஆண்டு பெப்ரவரி 11ஆம் திகதி இலங்கை இராணுவம் மற்றும் துணைப்படைகள் மேற்கொண்ட படுகொலை சம்பவத்தில் பெண்கள் குழந்தைகள் உட்பட 26 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதுடன், 36 பேர்வரை படுகாயமடைந்தனர்.

இப்படுகொலைகள் தொடர்பாக இராணுவ சிப்பாய்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. 15 வருடங்களுக்கு மேலாக நடைபெற்ற வழக்கில், 8 இராணுவத்தினர் சந்தேகநபர்களாக இனங்காணப்பட்ட நிலையில், ஒருவர் பின்னர் நிரபராதியென விடுவிக்கப்பட்டதுடன் ஒருவர் இறந்துவிட்டார்.

தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்று வந்த நிலையில், அவர்களும் குற்றமற்றவர்கள் என்று தெரிவிக்கப்பட்டு 2016ஆம் ஆண்டு அனைவரும் விடுவிக்கப்பட்டார்கள்.

### இனப்படுகொலை ஆதாரம்

இது போன்ற பல சம்பவங்கள் இடம்பெற்றிருக்கும் நிலையில்தான் முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் புதைகுழி தொடர்பாக சர்வதேச மேற்பார்வையில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும், சர்வதேச நியமங்களுக்கமைய புதைகுழியை தோண்டும் செயற்பாடு முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது. குற்றவாளிகளை கண்டுபிடிப்பதற்கு புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட ஆதாரங்கள் மிக அவசியமானவை. இந்த ஆதாரங்கள் எந்தளவுக்குப் பேணிப் பாதுகாக்கப்படுகின்றன என்ற கேள்வியும் மிக முக்கியமானது.

இது தொடர்பாக கோரிக்கை முன்வைக்கும் தமிழ்க் கட்சிகள் வெறுமனே அறிக்கைகளை மட்டும்தான் வெளியிடுகின்றன. அந்த அறிக்கைகளும் தமிழ் ஊடகங்களில் மட்டும்தான் வெளிவருகின்றது. சர்வதேச ரீதியாக இராஜதந்திர மட்டத்தில் இவை குறித்த கருத்துக்களை தமிழ்க் கட்சிகள் கொண்டு செல்வதன்மூலமாக மட்டும்தான் இதற்கான அழுத்தத்தை அதிகரிக்க முடியும்.



ஐ.நா. மனிதஉரிமைகள்பேரவையும்போர்க் குற்றங்களுக்கான ஆதாரங்களை சேகரிப்பதற்கான செயற்திட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளது. அதற்கான அலுவலகம் ஒன்றையும் அமைத்து, தொடர்ச்சியாக ஆதாரங்களைத் திரட்டும் செயற்பாடுகளையும் மனித உரிமைகள் பேரவை முன்னெடுத்து வருகின்றது. இதுவும் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் சாதகமான ஒன்று. கொக்குத் தொடுவாய் விவகாரத்தில் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்ப்பதற்கான செயற்பாடுகளை தமிழக்

வடக்கு கிழ 12 ஆம் பக்கம்

**அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து இப்போது அரசியல் அரங்கில் முக்கியமாக பேசப்படுகின்றது.ஆனால் 13 தீர்வு அல்ல என்று நீங்கள் குறிப்பிட்டிருப்பது எதற்காக?**

*13 ஆவது திருத்தத்தை அமெரிக்க தலைமையிலான மேற்குலக சக்திகளும் குறிப்பாக இந்தியாவும் வலிந்து அதனை அரசியல் தீர்வாக தமிழ் மக்களின் தலையில் கட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.13 ஆவது திருத்தத்தை நடைமுறை படுத்துவது பிரச்சினையல்ல.தமிழ் மக்கள் தலையில் இதனை கட்டிவிடுவதே இங்கு பிரச்சினையாகும்.13 ஆவது திருத்தம் தமிழ் மக்களை பொறுத்தவரையில் ஒரு ஆரம்பப் புள்ளி யாகக் கூட இருக்கமாட்டாது. குறைந்தபட்ச தீர்வாக அல்லது ஆரம்ப புள்ளியாக இருக்க வேண்டுமென்றால் கோட்பாட்டு அடிப்படையில் நான்கு விடயங்கள்*

*இன அழிப்பு காரணமாக தமிழ் மக்கள் 50 வருடம் பின்தங்கியுள்ளனர்.இந்த இடைவெளியை நிரப்புவதற்கு தமிழ் மக்களின் கைகளில் நிறைய அதிகாரங்கள் இருக்க வேண்டும்.சுயநிர்ணய உரிமையுடைய சுயாட்சி அதிகாரங்களும் தேவை. அதிகாரப்பகிர்வு என்றால் கூட்டும், சுயாட்சியும் போன்ற விடயங்களே முன்வரும்.*

*மத்திய அரசில் தமிழ் மக்கள் தேசிய இனமாக பங்குபற்றக்கூடிய ஒரு பொதுக் கொள்கை இருக்க வேண்டும். சுயாட்சி அதிகாரங்களுக்கான பாதுகாப்பு இருக்க வேண்டும். இலங்கை அரசு ஒரு கையில் கொடுத்துவிட்டு மறுகையில் பறிக்கும் வழக்கமுடையது. சோல்பரி அரசியல் யாப்பின் 29 ஆவது பிரிவு தொடக்கம் வடக்கு கிழக்கு இணைப்பு*



# 13 ஐ நடைமுறைப்படுத்த கோருவது

# தமிழ்த் தேசியக் கட்சிகளின் இயலாமையின் வெளிப்பாடு

—— அரசியல் ஆய்வாளர் **யோதிலிங்கம்** செவ்வி

**அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தச் சட்டமூலம் தமிழ் அரசியல் கட்சிகளிடையே சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்தியப் பிரதமர் மோடிக்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் அனுப்பும் கடிதங்கள் இந்த முரண்பாட்டை மேலோங்கச் செய்திருப்பதுடன், வெளிப்படையாக்கியிருக்கின்றது. இவை குறித்து அரசியல் ஆய்வாளரும் சட்டத்தரணியுமான யோதிலிங்கம் அவர்கள் அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தெரிவித்த கருத்துக்களை இலக்கு வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம்.**

*இருக்கவேண்டும்.*

***1.தமிழ் மக்களை தேசிய இனமாக அங்கீகரிக்க வேண்டும்.***

***2.அவர்களுடைய இறைமையை அங்கீகரிக்க வேண்டும்.***

***3.அவர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும்.***

***4.சுயநிர்ணய உரிமையை நடைமுறைப் படுத்துவதற்கான ஆட்சிபீட உரிமையை உருவாக்க வேண்டும்.***

*அரசியல் யாப்பு வடிவம் கொடுக்கையிலும் நான்கு விடயங்கள் முக்கியமானதாகும். அதிலொன்று தாயக ஒருமைப்பாடு.வடக்கு கிழக்கு இணைந்த அதிகார அலகு என்பது மிகவும் முக்கியமானதாகும்.வடக்கு கிழக்கு இணைப்பில்லை என்றால் தமிழ் தாயகம் இல்லை. தமிழ் தாயகம் இல்லையென்றால் தமிழ் தேசியம் இல்லை.தமிழ் தேசியம் இல்லையென்றால் தமிழ் அரசியலில் அர்த்தமே இல்லை.வடக்கு கிழக்கு இணைந்த அதிகார அலகு தமிழ் மக்களின் கூட்டுரிமை, கூட்டு அடையாளம் என்பவற்றை பாதுகாக்க அவசியமான ஒன்றாகும். சுயாட்சி அதிகாரங்களும் அவசியமாகும். தமிழ் மக்கள் தேசிய இனம் என்ற வகையில் அதிகாரங்களைஅடைய உரித்துடையவர்கள்.*

*ஊடாக தமிழ் மொழி அரசகரும மொழி வரை இந்த அனுபவம் இருக்கின்றது.ஆக சுயாட்சி அதிகாரங்களுக்கான பாதுகாப்பு தேவை. எனவே கோட்பாட்டு அடிப்படையில் நான்கு விடயங்கள், அரசியல் யாப்பு சட்டக வடிவத்திலே நான்கு விடயங்கள் என எட்டு விடயங்களையும் உள்ளடக்கியதே தமிழ் மக்களின் அரசியல் தீர்வாக இருக்கும்.தமிழ்மக்களின்அரசியல்தீர்வுஎன்பதைக் கொண்டு 13 ஆவது திருத்தத்தை ஒப்பிட்டு பார்க்கையில் மிகவும் மோசமான விளைவுகளே ஏற்படும்.13 ஆவது திருத்தப்படி வடக்கு கிழக்கு இணைக்கப்படவில்லை.ஒப்பந்தப்படி இணைக்கப்பட்டு பின்னர் சட்டத்தவறு என்று நீக்கிவிட்டனர்.மாகாணசபைகள் சுயாதீனமாக சட்டம் இயற்றுவதற்கான நிலைமைகள் கிடையாது.இதற்கு தடையாக சுமார் ஐந்து நிறுவனங்கள் உள்ளன.ஆளுநர், ஜனாதிபதி,பாராளுமன்றம்,சட்டமா அதிபர் , நீதிமன்றம் போன்றன இதற்கு தடையாகும்.*

*எனவே மாகாண சபைகளில் சட்டமியற்றும் சுயாதீனம், சுய இருப்பு என்பது இங்கில்லை. மாகாண நிர்வாகத்தின் அதிகாரம் மாகாண அமைச்சரவையிடம் இல்லை.மாகாணசபை அதிகாரம் ஆளுநரிடமே உள்ளது.அமைச்சர், முதலமைச்சர் போன்றோர் ஆளுநருக்கு ஆலோசனை கூறுபவர்களாக உள்ளனர்.ஒத்தியங்கும் பட்டியல் அதிகாரபகிர்வில் ஒரு தெளிவற்ற தன்மையைக் கொண்டுள்ளது.மாகாணசபை நிரலில் உள்ள சில விடயங்களில் நோக்குகையில் சட்டமியற்றுவதற்கு பாராளுமன்றம் ஒரு சட்டத்தை இயற்றி கொடுக்க வேண்டும்.முழுக்க முழுக்க மத்திய அரசில் தங்கி இருக்கும் ஒரு நிலைமையே இங்கு காணப்படுகின்றது.எனவே ஒரு அரசியல் தீர்வின் ஆரம்பப் புள்ளியாகக்கூட 13 ஆவது திருத்தத்தை நோக்குவதற்கில்லை. இந்தியாவுக்கு இது குறித்த தேவைப்பாடு இருக்கலாம்.13 ஆவது ஒப்பந்தம் இலங்கை மீது செல்வாக்கு செலுத்துவதற்குள்ள ஒரேயொரு ஆவணமாகும்.இலங்கை இந்திய ஒப்பந்தம் தொடர்ந்து இருக்க வேண்டுமென்றால் 13 ஆவது சரத்து இருக்க வேண்டும்.13 ஆவது சரத்து இருக்க வேண்டுமென்றால் மாகாண சபைகள் இயங்குவது போன்ற ஒரு தோற்றம் தெரிய வேண்டும்.எனவே இந்தியா தன்னுடைய நலன்களை மையப்படுத்தி இந்த விடயங்களை செய்யப் பார்க்கின்றது.*

*இந்தியாவுக்கு 13 ஆவது திருத்தம் அவசியம் என்றால் நாம் ஒரு கோரிக்கையை இந்தியாவிடம் முன்வைக்க வேண்டும்.13 ஆவது திருத்தத்தை அவசியமாக்க அரசியலமைப்பில் இரண்டு விடயங்கள் வேண்டும்.அரசியல் யாப்பு உறுப்புரை ஒற்றையாட்சி அரசாங்கத்தை வலியுறுத்துகின்றது. இதனை நீக்க வேண்டும்.உறுப்புரை 76 ஐயும் நீக்க வேண்டும்.வடக்கு கிழக்கு இணைக்கப்பட வேண்டும்.வடக்கு கிழக்கை இணைப்பதில் முஸ்லிம் மக்கள் பிரச்சினையானால் அவர்களுக்கு ஒரு உப அலகை ஏற்படுத்தலாம்.இதற்கு*

வடக்கு கிழ 06 ஆம் பக்கம்

## 13 ஐ நடைமுறை ... தொடர்ச்சி ...

முஸ்லீம்கள் உடன்படாவிடின் வடக்கு கிழக்கு தமிழ் மக்களை நிலத்துடன் இணைக்கக் கூடிய ஒரு ஏற்பாடு அங்கு இருக்க வேண்டும்.மாகாணசபை சட்டமியற்றுவதில் காணப்படும் தடைகள் நீக்கப்பட வேண்டும்.ஆளுநரின் அதிகாரத்தை முதலமைச்சரை தலைமையாகக்கொண்ட அமைச்சரவையிடம் வழங்க வேண்டும். உத்தியோகப் பட்டியலை மாகாண சபை பட்டியலுக்குள் கொண்டு வரவேண்டும்.நீதித்துறை அதிகார பரவலாக்கலுக்கு உள்ளாக்கப்பட வேண்டும்.இத்தகைய திருத்தங்களை மேற்கொள்ள இந்தியா அழுத்தம் கொடுப்பதற்கு ஏதுவான விடயங்களை நாம் மேற்கொள்ள வேண்டும்.

13 ஆவது திருத்தம் இப்போது குளறுபடிகளைக் கொண்டுள்ளது.13 ஐ தீர்வாக திணிக்கும் முயற்சியை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே இதனை ஏற்றுக்கொண்டால் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் முழுமையாக அழியக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகும்.13 ஆவது திருத்தம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட போது தமிழ் மக்களின் பிரச்சினைகளை பேசித்தீர்த்தே இதனை கொண்டு வந்தனர். பொறுப்பற்ற முறையில் செயற்படுவதை அனுமதிக்க முடியாது.மொத்தத்தில் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தக் கோருவது தமிழ் மக்களுக்கு செய்யும் மிகப்பெரிய துரோகமாகும் என்றே கருதுகின்றேன்.

**13 ஐ நடைமுறைப்படுத்த வேண்டுமென்று வலியுறுத்துகின்ற தரப்பினர் அதற்கு சில காரணங்களை முன்வைக்கின்றனர்.அதாவது இன்றைய நிலையில் 13 தான் குறைந்தபட்ச தீர்வாக இருக்கிறது என்பதும் இந்தியாவும் அதனைத்தான் தீர்வாக சொல்கிறது என்பதும் எனவே தாமும் இதனை ஆதரிப்பதாக ஆதரிக்கும் தமிழ் கட்சிகள் கூறுகின்றன. இதற்கு உங்கள் பதில் என்ன?**

இது தமிழ் கட்சிகளின் இயலாமையின் வெளிப்பாடு.தமிழ் அரசியலை வினைத்திறனுடன் கொண்டு செல்வதற்கான ஆற்றல் அவர்களிடம் இல்லாததால் 13 இற்கு பின்னால் செல்கின்றனர். ஒரு ஆரம்பப்புள்ளிக்கே தகுதியற்ற ஒன்றை குறைந்தபட்ச தீர்வாக எப்படி ஏற்றுக்கொள்வது?. அரசாங்கம் கொடுப்பதையே வாங்குவதற்கு தயாராக இருப்பார்களானால் இவர்கள் ஏன் ஒரு அரசியல்கட்சியாகஅல்லதுஅரசியல்தலைமையாக இருக்க வேண்டும்.தமிழ் மக்களுக்கு என்ன தேவை என்பதை கேட்பதற்கே அரசியல் கட்சிகளும் தலைமைகளும் தேவை.இந்தநிலையில் கட்சிகள் மிக மோசமாக நடக்கின்றன என்பதுதான் எனது கருத்து.

**தமிழ் தேசிய கட்சிகளை பொறுத்தவரையில் மூன்று விதமான கோரிக்கை கடிதங்கள் இப்போது இந்திய பிரதமருக்கு அனுப்பப்படுகின்றன.இந்திய போதுமான நகல் ஒன்றை செய்வதற்கு இந்தக் கடிதங்கள் உரிய அழுத்தத்தைக் கொடுக்கும் என்று நீங்கள் கருதுகின்றார்களா..**

இந்தியாவுக்கு இந்தக் கடிதங்கள் அழுத்தத்தை கொண்டு வருவதற்கு உதவாவிடினும் சில விடயங்களுக்கு உதவும்.13 ஆவது திருத்தத்துக்கு மேலாகவே தேவைகள் அமையவுள்ள நிலையில் இந்தியா தயாரித்தல் நிலையிலேயே காணப்படுகிறது.அனைவருடைய சம்மதத்தையும் பெற்று உதவக்கூடிய ஒரு நிலைமை இந்தியாவுக்கு வந்திருக்கின்றது. 13 ஐ வெளிக்காட்டுவதன் ஊடாக தமிழ் மக்களின் கோரிக்கையை வலுக்கச் செய்வதற்கான சூழ்நிலை காணப்படும். பெருந்தேசியவாதத்தைப் பொறுத்தவரையில் இரண்டு விடயங்கள் காணப்படுகின்றன.ஒன்று லிபரல் பிரிவு.மற்றது இனவாதப் பிரிவு.லிபரல் பிரிவு 13 ஐ கொண்டு சமாளிக்கலாம் என்று கூறும் நிலையில் இனவாதப்பிரிவு மறுக்கின்றது. இந்நிலையில் பெருந்தேசியவாதத்தின் ஒரு பிரிவினரையாவது திருப்திப்படுத்தும் நிலை இந்தியாவுக்கு உருவாகும்.தமிழ் மக்கள் இல்லாமல் இந்தியா இங்கு ஆதிக்கம் செலுத்த முடியாது.பெருந்தேசியவாதம் மூன்று தூண்களால் கட்டியெழுப்பப்பட்டது.இந்திய ஒப்பந்தம் பெருந்தேசியவாதத்தின் அடிப்படை கோட்பாடாக இருக்கிறது.அப்படி இருக்கையில் தமிழ் மக்களை ஒரு கருவியாக பயன்படுத்தாமல் இலங்கை மீது இந்தியா செல்வாக்கு செலுத்த முடியாது. தொடர்ச்சியாக தமிழ் மக்கள் ஒரு அழுத்த சக்தியாக இருக்கக்கூடிய வாய்ப்பும் இந்தியாவுக்கு இருக்கிறது.இந்நிலையில் இந்தியாவிற்கு இதில் வெற்றிகள் கிடைக்கக்கூடிய வாய்ப்பு உள்ளதென்றே கருதுகின்றேன்.

**தமிழ் கட்சிகள் அனைத்துமே பொதுவான கோரிக்கைகளில் கூட பிளவுபட்டிருக்கும் நிலையில் நிரந்தரமான அரசியல் தீர்வுக்கான அழுத்தத்தை அவர்களால் கொடுக்கக் கூடியதாக இருக்கும் என்று நினைக்கின்றீர்களா...**

நிரந்தர தீர்வு குறித்து தமிழ் கட்சிகளால் எந்தவொரு சிறிய செயற்பாட்டைக்கூட மேற்கொள்ள முடியாது.அவர்கள் இவ்வளவு காலமும் தங்கள் செயற்பாட்டின் ஊடாக இதனையே வெளிப்படுத்தி இருக்கின்றார்கள்.

இன்று சில அடைவுகள் வந்துள்ளதென்றால் கட்சி அரசியலுக்கு அப்பால் வெளியில் உள்ளவர்களாலேயே அதனை பெற்றுக் கொள்ள முடிந்துள்ளது.இன அழிப்பை ஒரு தீர்மானமாக கனடா மத்திய பாராளுமன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றி இருக்கின்றார்கள் என்றால் அது புலம்பெயர் தமிழர்களின் உழைப்பினால் வந்ததாகும்.தமிழ் கட்சிகள் எல்லா விடயத்தையும் கீழ் நோக்கியே வைத்துள்ளனர்.எனவே தமிழ் கட்சி அரசியலுக்கு அப்பால் எப்படி தமிழ் தேசியத்தை வளர்த்தெடுக்க வேண்டும் என்பதிலேயே நாம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.தமிழ் தேசியத்தை கட்டியெழுப்பி அரசியல் கட்சிகளை கட்டுப்பாட்டில் கொண்டு வர வேண்டும். கட்டுப்படுத்திய அரசியல் கட்சிகளை இணைத்து ஒரு தேசிய பேரியக்கத்தை உருவாக்க வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினையை உலகளாவிய ரீதியில் கொண்டு செல்ல வேண்டிய அவசியம் இப்போதுள்ளது.

தேசிய பேரியக்கத்தை கட்டியெழுப்புவதற்கு கட்சிகளே தடையாக இருக்கும்.தமிழர் தாயகத்தில் கட்சிகள் காலூன்றி படர்வதற்கான நிலைமை இன்று ஏற்பட்டுவிட்டது.தேசிய பேரியக்கத்தை உருவாக்கி கட்சிகளை கட்டுப்படுத்துவதன் மூலமே முன்செல்ல முடியும்.

**ஈழத்தமிழர் பிரச்சினையை பொறுத்தவரையில் உங்களுடைய பார்வையில் இந்தியா எத்தகைய அணுகுமுறையை கையாளும் என எதிர்பார்க்கலாம்?**

இந்தியாவுக்கு இரண்டு வகையான அழுத்தம் தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்ற வகையில் இருந்தது.ஒன்று புவிசார் அரசியலின் அழுத்தம்.இதன் காரணமாக இலங்கையை கட்டுப்பாட்டில் கொண்டு வர வேண்டும்.மேற்குலகத்திற்கு இலங்கை பூகோளப் பிரச்சினை.மற்றது இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு பிரச்சினை.இந்தியா புவிசார் அரசியலில் கைதியாக உள்ளது.இலங்கையை கட்டுப்பாட்டுக்குள் இந்தியா கொண்டு வருவதற்கு கருவியாக உள்ளது தமிழர் அரசியல். இதனைப் பயன்படுத்தியே கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றது.இந்தியாவுக்கு பல வழிகளிலும் தமிழ் மக்களின் பிரச்சினை குறித்து அழுத்தம் பிரயோகிக்கப்படுகின்றது.தமிழ்நாடு இந்திய மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள வெளித்தரப்பாக உள்ளது.உலகளாவிய ரீதியில் தமிழ் மக்களின் பிரச்சினை பேசப்படும் நிலை,. தாயகத்தில் தமிழ் தேசிய அரசியல் உயிர்ப்போடு இருக்கும் நிலைமை என்பன இந்தியாவுக்கு அழுத்தத்தை ஏற்படுத்தி இருக்கிறது.எனவே இந்தியா தமிழ் மக்கள் சார்பாக செயற்பட வேண்டிய கட்டாய நிலையில் உள்ளது.

மேலும் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை பாதுகாக்க வேண்டிய நிலையில் இந்தியா உள்ளது. அத்தோடு பூகோளமயக் கோட்பாட்டை அடக்க வேண்டுமென்றால் ஜனாதிபதி ரணிலையும் பாதுகாக்க வேண்டிய தேவை இந்தியாவுக்குள்ளது. ரணில் இந்தியாவை பொறுத்தவரை ஒரு மிகப்பெரிய சொத்து.இதேவேளை ரணிலை பாதுகாக்க வேண்டுமென்றால் சீன பக்கத்துக்கு சார்பாக செயற்பட வேண்டிய தேவையும் உள்ளது. இவ்வாறாக இந்தியா நெருக்கடியில் உள்ளது. இந்த வகையில் தமிழ் தரப்பு உரிய அழுத்தங்களை கொடுப்பதன் ஊடாக முன்னேறிச் செல்ல முடியும்.

**இந்திய பொதுத் தேர்தல் அடுத்த வருடம் இடம்பெறவுள்ளது.இந்த பொதுத்தேர்தலில் ஈழப்பிரச்சினை ஏதேனும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்குமா?**

உண்மையில் தாக்கத்தை உண்டுபண்ணும். தமிழ் மக்களின் பிரச்சினை இன்று பொது விவகாரம் ஆகியுள்ளது.இதை கட்சிகள் நிராகரிக்கவில்லை. இதை தூக்கி நிறுத்த வேண்டும் என்றால் தமிழ் தேசிய அரசியலில் ஒரு பகுதியை தமிழ் நாட்டில் செய்ய வேண்டும்.கோரிக்கையை கட்சிகளிடம் பொதுவாக முன்வைத்து அதனை ஏற்றுக் கொள்ள செய்தல் வேண்டும்.தமிழ் நாட்டின் பொதுவான பிரச்சினைகளுக்கு நாம் குரல் கொடுக்கலாம். கட்சிசார்பு நிலையை நாங்கள் எடுக்கக் கூடாது. கட்சி அரசியலுக்கு அப்பால் தமிழ் நாட்டில் செயற்படும் வேலைத்திட்டத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

தமிழ் நாட்டில் இறுக்கமான அரசியல் நிலைப்பாடு இருக்கிறது.பல கட்சிகள் காணப்படுகின்றன.எனவே இந்த அரசியல் சூழ்நிலையை நாங்கள் எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதிலேயே எமது முன்னேற்றம் தங்கியுள்ளது.

**13 ஆவது திருத்தத்தை பொறுத்தவரையில் இந்தியாவிற்கு பணிந்து செல்லக்கூடிய ஒருவராக ரணில் விக்ரமசிங்க இருக்கின்றாரா?**

ரணில் விக்ரமசிங்க கைதேர்ந்த ஒரு ராஜதந்திரியாக விளங்குகின்றார்.செயற்பாட்டில் ஆழம் கொண்டவர்.ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் மருமகன்.ஜே ஆரின் தோளில் ஏறி நின்று உலகத்தை பார்த்த ஒருவர்.ரணிலின் ஆற்றலுக்கு முன்னால் இந்திய அரசாங்கம் நின்று பிடிக்கும் என்று சொல்ல முடியாது. இந்தியாவின் செயற்திட்டங்கள் இலங்கையில் நடைமுறைப்படுத்த வேண்டும்.எனவே இதற்காக இந்தியா ரணிலுடன் ஒத்துப்போகவே முற்படும்.ரணில் எல்லாவற்றுக்கும் ஆம் என்று தலையாட்டுவார்.பின் செய்யாமலும் விடுவார்.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## கறுப்பு யூலை இனப்படுகொலை நடைபெற்று 40 வருடங்கள்

# ஏன் நீதி கிடைக்கவில்லை?

**1983ம் ஆண்டு கறுப்பு யூலை தமிழினப் படுகொலை நடைபெற்று இதுவரையில் அப்படுகொலை நாள் நினைவு கூரப்படுகின்றதே தவிர, படுகொலைக்கு நீதி கிடைக்கவில்லை. அது தொடர்பான ஆக்கபூர்வமான ஒரு செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை ஏன்? என்ற கேள்விக்கு சமூக செயற்பாட்டாளர்கள் இலக்கு ஊடகத்திற்கு வழங்கிய கருத்துக்கள்....**

## பிச்சை வேண்டாம் நாயைப் பிடி

**கே.எஸ்.இரத்தினவேல்** வழக்கறிஞர், யாழ்ப்பாணம்

எமது நாட்டில் அவ்வப்போது இனக்கலவரங்கள் அரசாங்கத்தின் ஆதரவுடன் காடையர்களால் கட்டவிழ்த்து விடப்பட்டு வருகின்றது. இந்நடவடிக்கையின்போது பல்லாயிரக்கணக்கான மக்களின் சொத்துக்கள் சேதமாக்கப்பட்டும், சூறையாடப்பட்டும் வருவது யாவரும் அறிந்த விடயமாகும். உயிரிழப்புகள் பலவும் ஏற்பட்டுள்ளன. தமிழர்களின் பொருளாதாரம், தமிழரின் இருப்புக்கள் மற்றும் தமிழரின் ஆதனங்கள் யாவற்றையும் இலக்கு வைத்து தமிழர்களை அடியோடு நிராயுதமாக்குவதே இனக்கலவரங்களின் நோக்கமாகவுள்ளது. அதில் இனவாதிகள் மிகப்பெரிய வெற்றியும் கண்டுள்ளார்கள்.



எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் அதில் முன்னணியில் இருந்த தமிழினம் தற்போது உரிமைக்காக போராடி வருகின்றது.”பிச்சை வேண்டாம் நாயைப் பிடி” என்ற அளவில் தமிழ் மக்களின் நிலைமை இப்போது இருக்கின்றது. 1983 இல் இடம்பெற்ற இனக்கலவரத்தைப் பற்றிய ஒரு விசாரணையை மேற்கொள்வதற்கென, 83 கலவரத்தின் பின்னர் பொதுமக்கள் மற்றும் வெளிநாடுகளின் வேண்டுகோளுக்கிணங்க அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் அரசாங்கம் ஒரு ஆணைக்குழுவை நியமித்தது. இக்குழுவானது கண்டி, கொழும்பு, யாழ்ப்பாணம் என்று எல்லா இடங்களுக்கும் சென்று விசாரணையை நடாத்தியது. இதன் பின்னர் உப்புச் சப்பற்ற ஒரு அறிக்கையை அக்குழு வெளியிடப்பட்டது. கலவரம் நடந்ததற்கான பின்புலம் எதுவும் கூறப்படாத நிலையில் இது நடந்தது, இப்படி நடந்தது அதற்கான நட்ட ஈடுகளை வழங்கத்தான் வேண்டும் என்ற வகையில் ஆணைக்குழு அறிக்கை வெளியிட்டது.எனினும் அரசாங்கத்தின் ஆதரவால் இடம்பெற்ற விடயங்களை ஆணைக்குழு சொல்லத் தவறிவிட்டது.

இதன் பின்னர் 2000 மாம் ஆண்டளவில் மேலுமொரு ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இளைப்பாரிய நீதியரசர் சர்வானந்தா இக்குழுவிற்கு தலைமை வகித்தார்.அக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டதாக ஞாபக மில்லை.எவ்வாறெனினும் அதன் விளைவாக எதுவுமே நடக்கவில்லை.1983 கலவரங்கள் இடம்பெற்று 40 வருடங்களாகியும் உரிய தீர்வு இந்த மக்களுக்கு

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## மூளைசாலிகள் வெளியேற்றம்

**என்.நாமதேவன்** திருகோணமலை

இலங்கைக்கு வன்செயல்கள் புதியதல்ல. இலங்கைக்கும் வன்செயல்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது என்பது யாவரும் அறிந்த விடயமாகும். இலங்கையின் வரலாற்றை எடுத்துக் கொண்டால் 1956, 1958, 1960, 1981, 1983, 1986 என்று காலத்துக்குக் காலம் வன்செயல்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. அண்மைகாலத்திலும் இது நடந்தேறி இருக்கின்றது. இவ்வன்செயல்களால் பல சேதங்கள் ஏற்பட்ட நிலையில் பலர் இதன் தாக்கத்திற்கு ஈடு கொடுக்க முடியாது இடம்பெயர்ந்துள்ளனர். இந்தியா உள்ளிட்ட சில நாடுகளுக்கு பாதிக்கப்பட்டவர்கள் இடம்பெயர்ந்துள்ளதோடு ஏனையோர் வேறு வழியின்றி இருப்பிடத்தை விட்டு உள்நாட்டில் சில இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளமையையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அத்தோடு கலவரத்தால் மூளைசாலிகளின் வெளியேற்றமும் அதிகளவில் காணப்பட்டது. இத்தகைய நிலைமைகள் இலங்கையின் அபிவிருத்திக்கு தடைக்கல்லாக அமையும் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை.

இந்த வகையில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த தமிழர்கள், சிங்கள மக்கள் செறிவாக வாழுகின்ற காலி, மாத்தறை, இரத்தினபுரி, பலாங்கொடை போன்ற பகுதிகளில் சென்று குடியேறினர். தமது பேச்சு மொழியைக் கூட சிங்களமாகவோ அல்லது இலங்கையில் வாழுகின்ற இஸ்லாமியர்கள் பேசும் பேச்சுத் தமிழை வருத்தி உள்வாங்கிக்கொண்டு வாழ வேண்டிய நிலைக்கு இவர்கள் தள்ளப்பட்டனர். பல சுமைகளுடன் வாழ்ந்துவந்த தமிழ் சமூகத்திற்கு ஆறுதல் வார்த்தைகள் கூறுவதற்கும் கூட யாரும் முன்வரவில்லை என்பது வருந்தத்தக்க விடயமாகவே தென்படுகின்றது.

இந்த வகையில் 1983 ஜூலை கலவரம் விரிசல்கள் பலவற்றுக்கும் வித்திட்டது. வழமைபோன்றே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுக்கப்போவதாக குரல்கள் ஓங்கி ஒலித்தன. பல வடிவங்களில் விசாரணைகளும் இடம்பெற்றன. எனினும் எல்லாம் முடக்கப்பட்ட நிலையில் இழுத்தடிப்பு நிலைமைகளையே அவதானிக்க முடிந்தது. எப்போது தீர்வு சாத்தியமாகும் என்று சிந்திக்க வேண்டியுள்ளது. எல்லாம் கேள்விக் குறியேயாகும்.

## தாமதத்திற்கு காரணம்

**எம். தமிழ்ச்செல்வன்,** வறக்காபொலை

இலங்கையில் சிறுபான்மை மக்கள் பல்வேறு நெருக்கீடுகளுக்கும் தொடர்ச்சியாகவே முகங்கொடுத்து வருகின்றமை புதிய விடயமல்ல. இதற்கு உந்துசக்தியாக இலங்கையில் பல்வேறு கலவரங்கள் இடம்பெற்றுள்ளன. இனவாத சிந்தனையாளர்கள் இத்தகைய கலவரங்களை முடுக்கிவிட்டுள்ள நிலையில் சில பிற்போக்கான, சுயலாபம் மிக்க அரசியல்வாதிகள் இதன் பின்னணியில் இருந்துள்ளனர் என்பதையும் மறுப்பதற்கில்லை. பிரச்சினைக்கான தீர்வின் தாமதத்திற்கும் இவ்வரசியல்வாதிகளை காப்பாற்றும் உணர்வு காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.



1983 இனக்கலவரம் நாட்டின் தேகத்தில் ஆழமான கறையினை ஏற்படுத்தி விட்டது என்றால் மிகையாகாது. தமிழ் மக்கள் வர்த்தக

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

நேர்காணல்கள் தொடர்ச்சி

கொக்குத்தொடு ... தொடர்ச்சி ...

நடவடிக்கைகளில் மேலோங்கி காணப்பட்ட நிலையில் இலங்கையின் பல்துறைசார் எழுச்சிக்கும் அவர்கள் காத்திரமான பங்காற்றி இருந்தனர். இந்நிலையில் இதனை காணச்சகியாத பிற்போக்குவாதிகள் இம்மக்களின் வர்த்தக நடவடிக்கைகளை ஒடுக்கி அவர்களை சகல துறைகளிலும் நிர்வாணமாக்கத் துடித்தனர். இதன் வெளிப்பாடே ஜூலைக் கலவரமாகும்.

இலங்கை பல்லின மக்களும் வாழுகின்ற ஒரு அழகிய நாடாகும். இங்கு சகலரும் சகல உரிமைகளையும் அனுபவிக்க உரித்தானவர்கள். இந்நிலையில் ஒரு மொழி மேலானதென்றோ அல்லது ஒரு மதம் மேலானதென்றோ யாரும் உரிமை கோர முடியாது. எந்தவொரு இனமும் இன்னொரு இனத்தைச் சார்ந்தவர்களை அடக்கியாள முடியாது. அவ்வாறு அடக்கியாளும் உரிமையும் அவர்களுக்குக் கிடையாது. நிலைமை இவ்வாறிருக்கையில் சிறுபான்மை இனத்தை ஒடுக்கும் முயற்சியின் ஒரு சம்பவமாக நாம் 1983 ஜூலை கலவரத்தை அடையாளப்படுத்த முடியும்.

ஜூலை கலவரம் நாட்டு மக்களின் ஐக்கியத்துக்கு குந்தகமாக அமைந்தது. ஒரு இனம் இன்னொரு இனத்தை வேரறுப்பதற்கு அடித்தளமாக அமைந்தது. இலங்கை வரலாற்றில் கறைபடிந்த அத்தியாயத்தை தோற்றுவித்த ஜூலை கலவரத்தின் தழும்புகள் மக்கள் மனங்களில் இருந்தும் இன்னும் நீங்காதுள்ளது. இத்தகைய கொடூரம் இலங்கையில் இனியும் இடம் பெறுவதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. சொத்துக்களுக்கு நட்ட ஈடும் வழங்கப்படவில்லை. கலவரத்தின் பின்னால் தமிழ் சமூகம் மிகப்பெரிய இழப்புக்கும், துரோகத்திற்கும் முகம் கொடுக்க நேர்ந்தது. இக்கலவரம் நடந்து 40 வருடங்கள் ஆகியுள்ள நிலையில் இதனால் பாதிக்கப்பட்ட பலர் இப்போது உயிருடன் இல்லை என்பதையும் கூறியாக வேண்டும்.

கொழும்பைச் சுற்றியுள்ள எல்லா இடங்களிலும் தமிழ் மக்களுக்கு இருந்த வீடுகள், கட்டடங்கள், வர்த்தக நிலையங்கள் எல்லாம் நாசமாகி அது மாற்றானுடைய கையைச் சென்றடைந்தது. இது ஒரு மாபெரும் இழப்பாகும். இந்த இழப்பினை ஈடு செய்வதற்கு அரசாங்கம் எவ்வகையிலும் முன்வரவில்லை. 40 வருடம் கடந்துள்ள நிலையில் எந்த அரசாங்கத்திற்கும் இது பற்றிய உணர்வு கூட இல்லை. ஆனாலும் இந்த விடயத்தை தமிழ் மக்கள் நினைவுகூற வேண்டும். ஏனென்றால் எங்களுக்கு இழைக்கப்பட்ட அநியாயம் உலகம் உள்ளவரை தெரிந்திருக்க வேண்டும். தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டதோடு , இனவாதிகளால் தூண்டப்பட்ட காடையர்கள் மாபெரும் அநியாயத்தை தமிழ் மக்களுக்கு புரிந்தார்கள். இந்த விடயம் உலகுக்கு காட்டப்பட வேண்டும். இதில் எவ்விதமான சந்தேகமும் இல்லை. நினைவுகூறல் நிச்சயமாக இடம் பெறுதல் வேண்டும்.

# தொடரும் இனவாதம்

**திருமதி எம்.பார்வதி,** நுவரெலியா

1983 ஜூலை கலவரம் காரணமாக இந்திய வம்சாவளி மக்கள் பெரிதும் பாதிப்புக்களை எதிர்நோக்கி இருந்தனர். இவர்களின் வியாபார ஸ்தலங்கள் தீயிட்டு கொளுத்தப்பட்டதோடு பொருட்கள் பலவும் விஷமிகளால் சூறையாடப்பட்டன. சிலஅப்பாவிஉயிர்கள்காவுகொல்லப்பட்டவரலாறுகள் மிகவும் கசப்பானவையாகும். இந்திய வம்சாவளி மக்கள் இந்நாட்டில் தொடர்ச்சியாகவே துன்ப துயரங்களை சந்தித்து வந்திருக்கின்றார்கள். இன்னும் இந்நிலைக்கு முடிவு இருப்பதாக இல்லை.

இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்னரும் அதற்கு பின்னரும் இனவாதத்திற்கு குறைவிருக்கவில்லை. 1947 ம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் இந்திய வம்சாவளி மக்களின் கை ஓங்கி இருந்தது. இதனால் அச்சமடைந்த ஐக்கிய தேசியக் கட்சி இம்மக்களின் பிரசாவுரிமையையும் வாக்குரிமையையும் பறித்தெடுத்தது. இதனால் அம்மக்கள் பின்னாளில் பல்வேறு சவால்களையும் சந்திக்க நேர்ந்தது. அரச உத்தியோகத்திற்கு விண்ணப்பங்கள் கூட அனுப்ப முடியாத நிலையில் அரசின் அபிவிருத்தியும் அவர்களைச் சென்றடையவில்லை. சுதந்திரத்துக்கு முன்னர் டொனமூர் ஆணைக்குழு இம்மக்களுக்கு வாக்குரிமை வழங்க முற்பட்ட நிலையிலும் இவர்களுக்கு வாக்குரிமை வழங்குவதால் பயனில்லை என்று எதிர்ப்புகள் கிளம்பின.

இந்திய வம்சாவளி மக்களின் செறிவைக் குறைத்து அவர்களை பல துறைகளிலும் ஓரம் கட்டுவதற்கான காய் நகர்த்தல்கள் பட்டியல் அடிப்படையில் தொடர்ச்சியாகவே இடம்பெற்று வருகின்றன. இந்திய வம்சாவளியினரை ஒப்பந்தங்களின் ஊடாக மீளவும் இந்தியாவிற்கு திருப்பி அனுப்புதல், தேயிலை விளை நிலங்களை அபிவிருத்தி என்னும் போர்வையில் சுவீகரித்து அம்மக்களின் செறிவையும், ஐக்கியத்தையும் பிளவுபடுத்தல் என்பன இதன் வடிவங்களேயாகும்.

ஒவ்வொரு ஜூலை மாதத்திலும் 1983 ஜூலையை நினைந்து மலையக மக்கள் கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களது கண்ணீரின் ஈரம் இன்னும் காயவில்லை. இவர்களின் பிரச்சினைகள் மூடிமறைக்கப்பட்டு பிரச்சினையற்ற சமூகமாக இம்மக்கள் வெளிக்காட்டப்படுகின்றனர். இது உண்மையல்ல. இந்நிலையில் மலையக மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் நிரந்தர தீர்வினைப் பெற்றுக் கொடுப்பது மிகவும் அவசியமாகும்.

# “இனச்சிக்கலுக்கு தமிழீழத்தைவிட்டால் வேறு தீர்வில்லை” என்ற எண்ணத்தை தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தியதே இனப்படுகொலைதான்

**தோழர் செந்தில்,** தமிழ்நாடு

1983 சூலை மாதம் தமிழர்களுக்கு எதிரான சிங்கள பௌத்த பேரினவாதத்தால் திட்டமிட்டு நிகழ்த்தப்பட்ட வன்முறைகள் இன்றளவும் தமிழ் மக்களால் நினைவுகூரப்பட்டு வந்தாலும் அதில் குற்றமிழைத்தவர்களுக்கு எதிரானப் புலனாய்வு நடத்தப்பட்டு பொறுப்புக்கூறல் உறுதிசெய்யப்படவில்லை.

இந்த நேரத்தில் தமிழர்களைப் பற்றி தான் சிந்திக்க முடியாது என அப்போதைய அதிபர் ஜே.ஆர். ஜெயவர்த்தனா வெளிப்படையாகவே தெரிவித்தார். இந்திய அரசின் வெளிப்படையான தலையீடும் அப்போதே தொடங்கிவிட்டது. வன்முறைகள் தொடர்ந்த நிலையில் இந்தியாவின் அப்போதைய வெளியுறவுத் துறை அமைச்சர் மறைந்த பி.வி.நரசிம்மராவ் இலங்கை வந்திருந்தார். கலவரங்களை நீங்கள் கட்டுப்படுத்துகிறீர்களா? இல்லை உங்களால் முடியாது என்றால் நாங்கள் கட்டுப்படுத்தவா? என்று கேட்டார். அதை தொடர்ந்துதான் வன்முறைகள் முடிவுக்கு வந்தன.



பொறுப்புக்கூறல் தொடர்பில் தமிழர்களிடம் இருந்து எவ்வித முன்னெடுப்பும் இருந்ததாக தெரியவில்லை. ஆனால், சூலை படுகொலைகள் தமிழ் மக்களின் மனதில், ”இனச்சிக்கலுக்கு தமிழீழத்தைவிட்டால் வேறு தீர்வில்லை” என்ற முடிவை எடுக்க வைத்தது. போராளிக் குழுக்களை நோக்கி ஆயிரக்கணக்கில் ஆண்களும் பெண்களும் செல்வதற்கு இப்படுகொலைதான் வழிகோலியது.

சுருங்கச் சொன்னால் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வீறுகொண்டு எழச் செய்து பண்புவகையில் இன்னொரு கட்டத்திற்கு மாற்றியது இப்படுகொலை நிகழ்வுதான். தமிழ் மக்களின் அரசியல் தலைமை தேர்தல் அரசியல் தலைமைகளிடம் இருந்து ஆயுதப் போராட்டத் தலைமைகளுக்கு கைமாறியதும் இதற்குப் பின்னர்தான்.

இந்தியநாடாளுமன்றத்திலேயேஅப்போதையஇந்தியாவின்தலைமை அமைச்சர் இந்திரா காந்தி, “இலங்கையில் நடப்பது இனப்படுகொலை என்று சொல்லாமல் வேறென்ன சொல்ல முடியும். இதை நாங்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது” என்றார். ஆனால், அப்படி வண்ணனை செய்யத்தக்க வன்முறைகள் தொடர்பில் பொறுப்புக்கூறல் நடக்க வேண்டும் என்று இந்திய அரசு தரப்பில் எவ்வித கருத்தும் எழவில்லை.

சூலைப் படுகொலைக்கு மட்டுமல்ல, இந்திய அமைதிப் படை செய்த அட்டூழியங்களுக்கு எதிராகவும் பொறுப்புக்கூறல் கோரிய போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வில்லை என்பதை இணைத்துப் பார்க்க வேண்டும். இந்திய படை அக்காலகட்டத்தில் தமிழர்களுக்கு போர்க்குற்றங்களுக்கு எதிராக நீதிகோரிய போராட்டங்களை ஈழத் தமிழர்கள் முன்னெடுக்கவில்லை.

தமிழ்நாட்டில் இருந்தாவது அம்முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்க

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# விரும்பத்தகாத விடயம்

**என்.கண்ணன்,** அக்கரைப்பற்று

1983 ம் ஆண்டு ஜூலையை தொடர்ந்த ஒவ்வொரு மாதமும் கறுப்பு ஜூலை என்று அழைக்கப்பட்டு வருகின்றது.இதன்காரணம் அந்த ஜூலையில் விரும்பத்தகாத விடயங்கள் பலவும் அரங்கேறியதனாலாகும்.கறுப்பு ஜூலை இலங்கை மக்களுக்கு பாடங்கள் பலவற்றையும் கற்றுக் கொடுத்தது.எனினும் இந்தப் பாடங்களை கருத்தில் கொண்டு இனவாதிகள் திருந்துவதாக இல்லை. ஒருவர் தனது மதத்தையும் மொழியையும் கலாசாரத்தையும் நேசிப்பதில் தவறில்லை.ஆனால் அதேபோன்று ஏனைய மதங்களையும் மொழிகள் மற்றும் கலாசாரத்தையும் மதிப்பதற்கு பழகிக்கொள்ள வேண்டும்.இதனால் ஐக்கியம் மற்றும் மனிதநேயம் என்பன வலுப்பெறும்.

# ஒரு தலைமை இல்லாத தமிழ்தேசிய அரசியலால் திண்டாடும் தாயகம்!

அகிம்சைப்போரும், ஆயுதப்போரும், நடத்திய வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் இன்று இராஜதந்திர செயல்பாடுகளை நடத்துகின்ற இந்த காலக்கட்டத்தில் ஒரு தலைமை இல்லாத தமிழ்தேசிய அரசியலால் திண்டாடும் நிலை உருவாகியுள்ளது.

2009, மே,18, க்கு முன்னர் சரியோ தவறோ 1949, தொடக்கம்,1977, வரை தந்தை செல்வா என்ற ஒரு தலைவனால் பல அகிம்சை ரீதியிலான போராட்டங்கள், மகாநாடுகள், ஒப்பந்தங்கள் என சில சில எதிர்ப்புகள் வந்தபோதும் வடக்கு கிழக்கில் தந்தை செல்வாவின் தலைமையில் விடுதலைக்கான தமிழ்தேசிய அரசியல் சரிவர முன்னகர்த்தப்பட்டது.

1977, ஏப்ரல்,26,ல் அவரின் மரணத்திற்கு பின்னர் ஆயுதப்போராட்டத்தில் 36, விடுதலை இயக்கங்கள் தோற்றம் பெற்று 1987, யூலை ,29 உடன் 35, விடுதலை இயக்கங்கள் மௌனித்தாலும் 2009, மே,18, முள்ளிவாய்க்கால் மௌனம் வரை ஒரு தலைவரின் கட்டளையில் தமிழ்தேசிய அரசியல் மிகநேர்த்தியாகவும், கட்டுக்கோப்பாகவும், ஒழுக்கமாகவும், முன்எடுக்கப்பட்டது.

2009, மே,18,க்கு பின்னர் இன்றுவரை 14, வருடங்கள் கடந்தும் இராஜதந்திர ரீதியான செயல்பாடுகள் சர்வதேச அரங்கில் புலம்பெயர் உறவுகளின் செயல்பாடுகளால் கூர்மை பெற்று முன்னோக்கி நகர்த்தப்பட்டாலும் வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் ஒரு தலைமையின் கீழ் தமிழ்தேசிய அரசியலை கொண்டு செல்ல முடியவில்லை என்பது உண்மை.

தடி எடுத்தவன் எல்லாம் தண்டல் காறன் என்ற நிலையும், இருவர் ஒருவர் சேர்ந்து புதிய கட்சிகளை உருவாக்குவதும், பின்னர் அவர்கள் எல்லாம் இணைந்து தாம் ஐந்து கட்சி, ஆறுகட்சிகள் நாமே ராசா, நாமே, மந்திரி, நாமே தளபதி என கூடிக்கதைப்பதும் பாரதப்பிரதமருக்கு கடிதம் எழுதுவதும் இப்போது மலிந்து விட்ட அரசியலாக காணப்படுகிறது.

2001,அக்டோபர்,20,ல் ஆரம்பித்த தமிழ் தேசிய கூட்டமைப்பு விடுதலைப்புலிகள் களத்தில் இருந்த 2009,மே,18, வரை நல்ல பிள்ளைகளாக நடித்து அவர்களின் மௌனத்துடன் அதில் இருந்த கட்சிகளுக்கு பதவி ஆசை, போட்டி,பொறாமை ஏற்பட்டு இன்று குறைந்தது பத்து கட்சி பத்து தலைவர்கள் என அறிக்கை அரசியலும், காகித அரசியலும், தேர்தல் அரசியலும் செய்வதே அவதானிக்க கூடியதாய் உள்ளது.

தமிழ் மக்களின் அரசியல் பயணத்திலே பல வித்தியாசமான தசாப்தங்களைக் கடந்து வந்திருக்கின்றோம். ஆனால், இன்று நாங்கள் இருக்கின்ற சூழல் இதற்கு முன்னெப்போதும் இல்லாத சூழலாக இருக்கின்றது.

எங்களுக்கு உகந்த ஒரு சூழலை நாம் உருவாக்கி விட்டோம் என்று நினைத்திருந்தபோது அந்தச் சூழலே எங்களுக்கு மாறானதாகவும், நாங்கள் சறுக்கி விழக்கூடியதாகவும், விழுந்தால் பாரிய காயம் ஏற்படக்கூடியதாகவும் இன்று எங்கள் முன்னால் இருந்து கொண்டிருக்கின்றது.

மிக நிதானமாக, மிக கவனமாக நாங்கள் எங்களது மக்களது நலன்களை முன்னிறுத்தி முன்னேற வேண்டிய காலமாக இருக்கின்றது.

விசேடமாக இந்த வருடத்தில் இவை எல்லாவற்றையும் சீர்தூக்கி ஆராய வேண்டும். எமது நீண்டகால இலக்குகளை அடைவதற்கான வழிகள் என்ன?

பொதுமக்களினது நலன்களை அடைவதில் அவர்களுக்கு எப்படித் தலைமைத்துவம் கொடுக்க முடியும்? என்பது குறித்து சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய காலமாக இது இருக்கின்றது.

இது இலகுவான ஒரு சவால் அல்ல. முன்னெப்போதும் இல்லாத பலத்த சவால். இது கஷ்டம் என்று கைவிட்டுவிட்டு நாங்கள் ஓடிவிட முடியாது. நிச்சயமாக முகம் கொடுக்க வேண்டிய ஒரு சவாலாக இது இருக்கின்றது. எனவே, இந்தச் சவாலுக்கு முகம் கொடுத்து தமிழ் மக்களின் இலக்கை நாம் அடைந்தே தீருவோம்.

வாழ்க்கையில் தோல்வியைச் சந்திப்பது எப்படி, தோல்வியைக் கையாள்வது எப்படி, ஏமாற்றங்களுக்கு முகம் கொடுப்பது எப்படி அதில் இருந்து மீளுவதற்கு நாம் அனைத்து தமிழ்தேசிய கட்சிகளும் ஒற்றுமையாக வருவதற்கான முயற்சிகளை எவரும் எடுத்ததாக கூடத் தெரியவில்லை.

இலங்கை ஜனாதிபதி ரணில் பாரதப் பிரதமர் மோடியை எதிர்வரும் வாரத்தில் சந்திக்கவுள்ள நிலையில் பாரதப்பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழ்மக்களுக்கான ஒரு நிரந்தர தீர்வு இதுதான் அதை வலியுறுத்துங்கள் என்று கடிதம் எழுத முடியாத வக்கற்ற தமிழ் கட்சிகளாகவே தற்காலிக தீர்வை கேட்டு அதாவது 13,வது திருத்தத்தை வழங்க இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுங்கள் என ஒரு சாராரும், சமஷ்டித்தீர்வை வலியுறுத்தி இன்னோர் சாராரும் கடிதங்களை அனுப்பியுள்ளனர்,



பா.அரியநேத்திரன்

அதில் கடந்த 2023, ஜனவரியில் ஆரம்பித்த ஜனநாயக தமிழ்தேசிய கூட்டணி (DTNA) கட்சியில் உள்ள ஐந்து கட்சிகளான.

1. **தமிழீழவிடுதலை இயக்கம்-தலைவர் செல்வம் அடைக்கலநாதன்.**
2. **ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி-தலைவர் சுரேஷ்பிரமச்சந்திரன்**
3. **தமிழ் மக்கள் விடுதலைக்கழகம்-தலைவர்-த.சித்தாத்தன்.**
4. **தமிழ் தேசிய கட்சி-தலைவர் என். ஸ்ரீகாந்தா.**
5. **ஜனநாயகப்போராளிகள் கட்சி-தலைவர் இ.கதிர்.**

ஜனநாயக தமிழ்தேசிய கூட்டமைப்பில் அங்கம் பெறாத

6. **தமிழ் மக்கள் கூட்டணி-தலைவர் சி.வி. விக்கினேஷ்வரன். ஆகிய ஆறுகட்சிகள் ஒரு பேப்பரில் 13, ஐ அமுல்படுத்து மாறு கடிதம் எழுதி இந்திய தூதுவருடம் வழங்கியுள்ளனர்.**

தமிழ்தேசிய மக்கள்முன்னணி-தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சமஷ்டித்தீர்வை வலியுறுத்தி இந்தியப்பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி தமிழ்தேசிய கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தன் ஐயா பாரதப்பிரதமரிடம்அர்த்முள்ளஅதிகாரப்பகிர்வாக சமஷ்டித்தீர்வை வலியுறுத்தியதான நிலையை நேற்று(13/07/2023) இந்தியத்தூதுவரிடம் வலியுறுத்தியதுடன் சமஷ்டி அடிப்படையில் தீர்வு வழங்க கடிதமும் அனுப்ப உள்ளனர்.

மொத்தம் எட்டு தமிழ்தேசிய கட்சிகளில் ஆறு கட்சிகள், 13,வது திருத்தம் தொடர்பாகவும், இரண்டு தமிழ்தேசிய கட்சிகள் சமஷ்டி தொடர்பாகவும் கடிதம் அனுப்பியுள்ளனர்

**யார் இந்த எட்டு கட்சிகளும்..!**

இவர்களில்புளட்டும்அதன்தலைவர்சித்தாத்தனும், தமிழ்மக்கள் கூட்டணியும் அதன்தலைவர் சி.வி. விக்கினேஷ்வரனும் தவிர்ந்த ஏனைய ஆறு கட்சிகள் என தம்மை அடையாளப்படுத்தும்..!

**செல்வம் அடைக்கலநாதன்.**
**சுரேஷ்பிரமச்சந்திரன்.**
**என.ஸ்ரீகாந்தா,**
**கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,**
**இரா.சம்மந்தன்**

ஆகிய ஐவரும் 2001,அக்டோபர்,20, தொடக்கம் 2009, மே, 18, வரை தமிழ்தேசிய கூட்டமைப்புடன் செயல்பட்டவர்கள்.

புளட்டும் அதன் தலைவர் சித்தாத்தனும் 2009, மே,18,க்கு பின்னர் 2011,மார்ச்,17, ல் வடமாகாண உள்ளூராட்சி சபை தேர்தலின்போது தமிழ்தேசிய கூட்டமைப்பில் இணைந்து கொண்டவர்.

தமிழ் மக்கள் கூட்டணி என தற்போது புதிய கட்சியில் தலைவராக உள்ள சி.வி. விக்கினேஷ்வரன் 2013,செப்டம்பர்,21,ல் இடம்பெற்ற வடமாகாணசபை தேர்தலில் தமிழ்தேசிய கூட்டமைப்பின்மூலம் கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்டவர்.

2018,அக்டோபர்,24,ல் தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து பிரிந்து மான் சின்னத்தில் தமிழ் மக்கள் கூட்டணி கட்சியை தொடங்கியவர்.

விடுதலைப்புலிகளில் இருந்து புனர்வாழ்வு பெற்ற போராளிகள் சிலபேர் சேர்ந்து ஆரம்பித்த ஜனநாயகப்போராளிகள் கட்சி தலைவர் கதிர் இவர்கள் கடந்த 2023, உள்ளூராட்சி சபை தேர்தலுக்காக ஜனநாயக தமிழ்தேசிய கூட்டணியில் இணைந்தவர்கள்.

தமிழ்தேசிய மக்கள்முன்னணி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழ்தேசிய கூட்டமைப்பில் இருந்து 2010,பெப்ரவரி,10, ல் விலகி தமது பாட்டனாரின் அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் கட்சியை தேர்தல் கட்சியாக பயன்படுத்துபவர்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் தலைவர் சுரேசும் 2020,ஆக்ஸ்ட் ,05 வரையும் தமிழ்தேசிய கூட்டமைப்புடன் இயங்கி பின்னர் விலகியவர்கள்.

இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் முன்னாள் தலைவரும், தமிழ்தேசிய கூட்டமைப்பு தலைவருமான இரா.சம்மந்தன் தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவராகவே உள்ளார்.

முப்பது வருடம் அகிம்சை போராட்டமும், முப்பது வருடம் ஆயுதப்போராட்டமும், தற்போது பதினாங்கு வருடங்களாக இராஜதந்திர செயல்பாடுகளை முன்னகர்த்திக்கொண்டிருக்கும்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# தமிழர்களின் போராட்டம் என்பது சுயநிர்ணய உரிமைக்கானது

**மட்டு.நகரான்**

வடகிழக்கு தமிழர்களின் தாயகப்பகுதியாகும்.தமிழர்கள்சுயநிர்ணய உரிமையுடன் தங்களை தாங்களே ஆளவேண்டும்,இந்த நாட்டில் தமிழர்களும் ஒரு இனமாக தலைநிமிர்ந்து வாழவேண்டும், அவர்கள் சுய கௌரவத்துடன் வாழவேண்டும் என்பதற்காகவே கடந்த 70 வருடத்திற்கு மேலாக ஈழத்தில் தமிழர்கள் போராடிவருகின்றனர்.

தமிழர்களின் ஆயுதப்போராட்டம் என்றாலும் சரி அகிம்சை ரீதியான போராட்டமாகயிருந்தாலும் சரி இராஜதந்திர போராட்டமாகயிருந்தாலும் சரி தமிழர்களின் போராட்டம் என்பது தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டமாகவிருந்ததே தவிர வீதிகளுக்கோ,தொழிற்சாலைகளுக்கோ விமான, ரயில் போக்குவரத்துகளுக்கோ நடைபெறவில்லையென்பதை ஈழத்தமிழர்களும் உலக மக்களும் உணர்ந்துகொள்ளவேண்டும்.

ஆயிரக்கணக்கான போராளிகள் கழுத்தில் சயனைட் வில்லைகளை தொங்கவிட்டும் உடலில் குண்டுகளை கட்டிச்சென்று வெடிக்கவைத்தும் தமது உயிர்களை எல்லைகளில் நின்று இழந்ததும்,பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது உயிர்களையும் உடைமைகளையும் இழந்தது இந்த அபிவிருத்திக்கும் பகட்டுக்கும் அல்ல.அத்தனை இழப்புகளும் தமிழர்களின் உரிமைக்காகவும் இந்த மண்ணில் சுதந்திரமாக வாழவேண்டும் என்பதற்காக மட்டுமேயாகும்.



ஆயுதப்போராட்டம் வீறுகொண்டபோதெல்லாம் பலகஸ்டங்களைதாங்கியவாறு போராட்டங்களுக்கு ஆதரவு வழங்கியவர்கள் இன்று ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்ட சூழ் நிலையில் தமிழ் மக்கள் எதற்காக போராடினார்கள் என்ற நோக்கத்தினை மறந்து செயற்படுவது கவலைக்குரிய விடமாயமாக மாறு கின்றது.

இன்று வடகிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் சூழ்நிலையினை தமக்கு சார்பாக பயன்படுத்தி வடகிழக்கு மாகாணத்தினை தமக்கு சார்பாக பயன்படுத்தி தமிழர்களின் உரிமை ரீதியான போராட்டங்களை நசுக்குவதற்கு அல்லது தமிழர்களின் உரிமை ரீதியான கோரிக்கைகளை வலுவிழக்கச்செய்வதற்கு பாரியளவிலான திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றமை தொடர்பில் அண்மைக்காலமாக அவதானிக்கப்பட்டு வருகின்றது.

வடகிழக்கு மாகாணத்தினை தமது மாநிலங்கள் போன்று மாற்றி தமது செயற்பாடுகளை இந்தியா முன்னெடுத்துவரும் அதே நேரம் பாகிஸ்தான் மற்றும் சீனா போன்ற நாடுகள் கிழக்கு மாகாணத்தினை தமக்கு சார்பானதாக மாற்றுவதற்கான முயற்சிகளை முன்னெடுத்துவருகின்றது.இந்த நிலையில் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக பாரிய கஸ்டங்களை எதிர்நோக்கிய நிலையில் இலங்க அரசுக்கு கைகொடுத்த இந்த நாடுகள் என்ற காரணத்தினால் இலங்கை அரசாங்கம் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான அனுமதியை மறைமுகமாக வழங்கியுள்ளதாகவே கருதவேண்டியுள்ளது.

வெறுமேன இந்தியா,சீனா,பாகிஸ்தான் போன்ற நாடுகளின் ஊடுருவல் என்பதை நாங்கள் சர்வசாதாரணமாக எடுத்துக்கொள்ளமுடியாது.இந்தியா என்பது தமிழர்களின் தொப்புள் கொடி உறவு நாடு.தமிழர்களின் நலனில் அக்கறை கொண்டிருக்கும் நாடு என்றெல்லாம் நாங்கள் நோக்கினாலும் வடகிழக்கு தமிழர்களின் தாயகப்பகுதியாகும்.இங்குள்ள தமிழர்கள் தனித்துவ அடையாளங்களையும் கலாசாரங்களையும் கொண்ட தமிழர்கள். அவர்களை தனித்துவமாகவும் அவர்களின் அடையாளங்களுடனும் வாழவைப்பதே இந்தியா போன்ற நாடுகள் தமிழ் மக்களுக்கு செய்யும் நன்மையாக அமையும். மாறாக குழம்பிய குட்டைக்குள் மீன்பிடிக்க நினைக்கும் வகையில் செயற்படுவது என்பது நொந்துபோயுள்ள மக்களை மீண்டும் துன்பங்களுக்குள் தள்ளும் செயற்பாடுகளாகவே பார்க்க வேண்டியுள்ளது.

அண்மைக்காலமாக வடகிழக்கில் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் இந்தியா போன்ற நாடுகள் முன்னெடுக்கும் செயற்பாடுகள் பல்வேறு சந்தேகங்களை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்திவருகின்றது.அண்மையில் மட்டக்களப்பு நடைபெற்ற சிவில் சமூக அமைப்புகளுடனான கலந்துரையாடலின்போது சில கருத்துகளும் பிரதியேகமாக முன்வைக்கப்பட்டன.அதாவது இந்தியாவுடன் வடகிழக்கு மாகாணத்தினை இணைத்து சில செயற்றிட்டங்களை இந்தியாவும் தமிழ் நாடும் முன்னெடுக்கவுள்ளதாக அங்கு தெரிவிக்கப்பட்டது.இவ்வாறான கருத்துகளை நாங்கள் வெறும் கருத்துகளாக கடந்து செல்லமுடியவில்லை.அதற்கான ஆரம்ப கட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றதா என்ற சந்தேகம் இன்று கிழக்கில் தமிழ் மக்கள் மத்தியில் எழுந்திருப்பதை காணமுடிகின்றது.

ஏதோ இந்தியா வடகிழக்கு தமிழ் மக்களை பாதுகாக்கப்போகின்றது என்ற வகையில் முன்னெடுக்கப்படும் கருத்துகள் அல்லது செயற்பாடுகள் எதிர்காலத்தில் வடகிழக்கு தமிழ் மக்களின் உரிமை ரீதியான விடயத்தினையும் தமிழ் தேசியத்தினையும் அழிக்கும் வகையிலான நடவடிக்கைகளாகவே பார்க்கவேண்டியுள்ளது.

இவ்வாறான நிலையில் கிழக்கு மாகாணத்திற்கான ஆளுனராக பௌத்த இனவாத சக்திகளின் எந்த எதிர்ப்பும் இல்லாமல் தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டமையும் ஒரு முக்கிய காரணமாக பார்க்கப்படவேண்டியுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் கடந்த ஆளுனராகயிருந்த அனுராதா ஜகம்பத் மீது கிழக்கில் உள்ள சிங்கள மக்கள் அதீத நம்பிக்கை கொண்டிருந்தனர். அத்துடன் சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளும் அவர் மீது அதீத நம்பிக்கைகொண்டிருந்ததுடன் கிழக்கில் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு அத்துமீறல்களும் முன்னாள் கிழக்கு மாகாண ஆளுனர் ஊடாகவே முன்னெடுக்கப்பட்டுவந்தது.இந்த நிலையில் திடீர் என குறித்த ஆளுநர் தூக்கப்பட்டு புதிய ஆளுநராக ஒரு தமிழரான ஒருவர் கிழக்கில் ஆளுநராக கொண்டுவந்தபோது இந்த பேரினவாத சக்திகள் எதுவும் வாய் திறக்கவே இல்லை. கடந்த காலத்தில் கிழக்கில் சிங்கள முதலமைச்சர் கொண்டுவரவேண்டும் என்ற வகையில் செயற்பட்ட கடும்போக்கு சிங்கள சக்திகள் கூட வாய்திறக்கவில்லையென்னும்போது இது தொடர்பான சந்தேகங்கள் தமிழ் மக்கள் மனதில் அச்சத்தினை ஏற்படுத்தியது.

கடந்த காலத்தில் கிழக்கில் முன்னெடுக்கப்படும் பல்வேறு செயற்பாடுகள் தமிழ் மக்கள் மனதில் ஏற்கனவே பல சந்தேகங்களை ஏற்படுத்திவருகின்றது.

மட்டக்களப்பு ஏறாவூர் புன்னக்குடா பகுதியில் மக்களின் பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியில் நிர்மாணிக்கப்படும் தொழிற்சாலை தொடர்பில் கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்டுவந்த எதிர்ப்புகள் இன்று இல்லாமல்செய்யப்பட்டு தொழிற்சாலை வேலைகள் நடைபெற்றுவருகின்றன.

இந்த தொழிற்சாலையானது இந்தியாவின் பல மாநிலங்களில் மக்களினால் ஆர்ப்பாட்டங்கள் நடாத்தப்பட்டு இடைநிறுத்தப்பட்ட தொழிற்சாலை. அதாவது நூல்களுக்கு சாயம் இடும் தொழிற்சாலை.இதிலிருந்து வெளியேறும் கழிவுகளை கடலுக்குள் செலுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டதாக இந்த தொழிற்சாலைகள் அமைக்கப்படுகின்றன. இந்த தொழிற்சாலைகள் இயங்கு நிலையேற்படுமானால் கடல் பாரியளவில் மாசுபடும் நிலைமை உருவாகலாம் என்பதுடன் தொழிற்சாலைக்கான தண்ணீர் அதிகளவில் பெறப்படும் போது, எதிர்காலத்தில் குடிநீர் தட்டுப்பாடும் ஏற் படலாம் என்ற வகையிலான கருத்துகள் முன்வைக்கப்பட்டுவருகின்றது.

மறுபுறத்தில் பாகிஸ்தான் முஸ்லிம்களின் பிரதேசங்களில் தொடர்ச்சியான சந்திப்புகளை முன்னெடுத்துவருவதுடன் அம்பாறை மாவட்டத்தில் ஒலுவில் துறைமுகத்தினையும் சென்று பார்வையிட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.இதேபோன்று சீனா ஒரு புறம் தமிழர்களின் காணிகளைப்பெற்று வேலைத்திட்டங்களைமுன்னெடுப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறான செயற்பாடுகளை தமிழர்களுக்கான ஆதரவான செயற்பாடுகள் என்று கருதமுடியாது.சிங்கள அரசுகள் தமிழர் பகுதிகளில் தமிழர்களின் உரிமைகளை பறிப்பதற்காக கைக்கொள்ளும் மாற்றுவழிகளாகவே கருதவேண்டியுள்ளது.இவை தமது பிராந்தியங்களை பாதுகாப்பதற்காக வடகிழக்குதமிழ் தேசியத்தினை சிதைக்கும் செயற்பாடுகளை எதிர்காலத்தில் முன்னெடுப்பதற்கான சாத்தியங்கள் உள்ளன.

இந்தியா எமது தொப்புள் கொடி உறவு,என்றும் எம்மை கைவிடாது என்ற எண்ணப்பாட்டுடன் நாங்கள் இந்தியாவின் மாநிலம்போல் செயற்படும் நிலைமை ஏற்பட்டால் இங்கு தமிழ்தேசியத்திற்கு எதிரான பல்வேறு

வடக்கு கிழ 12 ஆம் பக்கம்

# வாக்குறுதியும் செயற்பாடும்

துரைசாமி நடராஜா

மலையக சமூகத்தினர் உரிமை மீறல்கள் பலவற்றுக்கும் உள்ளாகி வருகின்றனர். கல்வி, தொழில், இருப்பிடம் எனப்பல்வேறு துறைகளும் இதில் உள்ளடங்கும்.இவ்வுரிமை மீறல்கள் காரணமாக இச்சமூகத்தினர் தொடர்ந்தும் ஒடுக்கப்பட்ட நிலையில் இருந்து வருவதோடு தேசிய நீரோட்டக் கனவும் கானல் நீராகி வருகின்றது.இந்நிலையில் இம்மக்களின் சகலதுறைசார் உரிமைகளும் உறுதிப்படுத்தப்பட்டு தேசிய நீரோட்டக் கதவுகள் திறந்து விடப்பட வேண்டியதன் அவசியத்தினை சமூக ஆர்வலர்கள் தொடர்ச்சியாகவே வலியுறுத்தி வருகின்றனர்.



'உரிமைகள் மனித வாழ்வின் நிபந்தனைகள். பொதுவாக அவையின்றி எம் மனிதனும் சிறப்பாக செயற்பட முடியாது. இந் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காகவே இயங்கும் அரசு உரிமைகளை பேணுவதன் மூலம் மட்டுமே தனது இலக்கினை அடைந்து கொள்ள முடியும்' என்கிறார் அறிஞர் லஸ்கி. 'உண்மையான உரிமைகள் சமூக பொது நலத்தின் நிபந்தனைகள்' என்பது அறிஞர் ஹோபஸ்ஸின் கருத்தாகும். எல்லா நிலைகளிலும் உரிமைகளின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. இந்த வகையில் சிவில் உரிமைகள், அரசியல் உரிமைகள், பொருளாதார உரிமைகள் என்றவாறு உரிமைகள் வகைப் படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறாக ஏட்டளவில் உரிமைகள் இருந்தபோதும் அவற்றை அனுபவிக்க முடியாதவகையில் பல சமூகத்தினர் இருந்து வருவது தெரிந்த விடயமாகும்.அதிலும் பின்தங்கிய சமூகத்தினரிடையே உரிமை மீறல்கள் அதிகமாக இடம்பெற்று வருவதையும் அறியக் கூடியதாக உள்ளது.இந்த வரிசையில் மலையக மக்களும் உள்ளீர்க்கப்பட வேண்டியவர்களே யாவர்.



மலையக மக்களின் வரலாறு இந்நாட்டில் 200 வருடங்களாகி இருக்கின்றது.இந்த 200 வருட காலமும் இவர்கள் கீழ்மட்ட வாழ்க்கை நிலைமைகளையே கொண்டிருப்பது வருந்தத்தக்க விடயமாகும்.இச்சமூகத்தினரைப் பொறுத்தவரையில் பல்வேறு உரிமை மீறல்கள் இடம்பெறுவதொன்றும் புதிய விடயமல்ல. இத்தகைய உரிமை மீறல்கள் இச்சமூகம் ஒடுக்கப்படுவதற்கு வலுசேர்த்துள்ளது. கல்வியுரிமை என்பது ஏனைய உரிமைகளை அனுபவிப்பதற்கான முக்கிய உரிமையாக விளங்குகின்றது.பொருளாதார சமூக வகுதிக்குள் கல்வியுரிமை உள்ளடக்குகின்றது.கல்வி உரிமையை உத்தரவாதப்படுத்துவதற்காக அரசு சட்ட நிர்வாக மற்றும் ஏனைய வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும்.மேலும் அனைத்து பிரஜைகளும் சமத்துவ அடிப்படையில் இவ்வுரிமையை அனுபவிப்பதை அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் சமவாயம் உள்ளிட்ட பலவும் வலியுறுத்துகின்றன.எனினும் மலையக மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு குறுக்கீடாக பல்வேறு காரணிகள் காணப்படுகின்றன.வறுமை, போஷாக்கின்மை, போக்குவரத்துச் சீர்கேடு, கஷ்ட மற்றும் அதிகஷ்ட பிரதேச நிலைமைகள், மனித மற்றும் பௌதீக வளப்பற்றாக்குறை போன்ற பலவும் இதில் உள்ளடங்குகின்றன.அரச வழிகாட்டி தத்துவக் கோட்பாடுகளில் அனைத்து மட்டங்களிலும் அனைவரும் சமத்துவ அடிப்படையில் கல்வியை அணுகுவதற்கான சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் மலையகத்தைப் பொறுத்தவரையில் இக்கூற்று மறுக்கப்பட்ட ஒன்றாகவே இருந்து வருகின்றது.மலையகத்தவர்களின் கல்வி நிலைமைகள் ஏனைய துறையினரைக் காட்டிலும் வீழ்ச்சிப் போக்கினையே வெளிப்படுத்தி வருகின்றன.2012/13 தகவலின்படி பெருந்தோட்ட பகுதிகளில் பாடசாலைக்கு செல்லாதோர் 12.2 வீதமாகவும், 5 ம் தரம் வரை கல்வி கற்றோர் 42 வீதமாகவும் 6 - 10 ம் தரம் வரை கல்வி கற்றோர் 38.07 வீதமாகவும, க.பொ.த. சாதாரண தரம் வரை கல்வி கற்றோர் 4.09 வீதமாகவும, க.பொ.த. உயர்தரம் வரை கல்வி கற்றோர் 2.2 வீதமாகவும் காணப்பட்டனர்.பெருந்தோட்டப் பகுதிகளில் பாடசாலைக்கு செல்லாதோர் நகரம், கிராமத்தைக் காட்டிலும் 4 - 6 மடங்கு அதிகமாகும்.இக்கல்விப் பின்னடைவுகளை சீர்செய்வதில் அரசாங்கத்தின் வகிபாகம் எந்தளவுக்கு கை கொடுத்துள்ளது என்பது கேள்விக்குறியாகும்.

தொழில் உரிமையானது ஒருவர் விரும்பிய தொழிலை தேர்ந்தெடுத்தலை பிரதான விடயமாக ஏற்றுக்கொண்டுள்ளது. இலங்கை அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் (உறுப்புரை 14) இவ்வுரிமை அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.தொழிற்பாதுகாப்பு, நியாயமான சம்பளம், பாதுகாப்பானதும்தூய்மையானதுமான தொழில் சுற்றாடல் என்பவற்றுடன் தொழிலுரிமை தொடர்புபடுவதாக புத்திஜீவிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.எனினும் மலையக தொழிலாளர்களின் தொழிலுரிமைகள் பல சந்தர்ப்பங்களில் கம்பனியினராலும், தோட்ட நிர்வாகத்தினாலும் மீறப்பட்டு வருகின்றன. உழைப்பிற்கேற்ற ஊதியமென்பது கானல் நீராகியுள்ள நிலையில் தொழிலாளர்களின் உழைப்பு உறிஞ்சப்பட்டு அவர்கள் கசக்கிப் பிழியப்படுவதும் புதிய விடயமல்ல. இதே வேளை மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டுப் பணிப்பெண்களாக செல்லும் மலையகப் பெண்கள் பலர் தொழில் உரிமைகள் மீறப்பட்ட நிலையில் துன்ப துயரங்களை சந்தித்து வருகின்றனர்.இவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் அதிகரித்துள்ள நிலையில் பலர் உச்சகட்ட நெருக்கீடுகளால் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளமையும் தெரிந்ததேயாகும். எனவே நாட்டிற்கு தேசிய வருவாயை அதிகளவில் ஈட்டித்தரும் இவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் நோக்கில் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் இடம் பெறுதல் வேண்டும்.

**மனித உரிமை சாசனம்**

இலங்கையில் தொழிற் சட்டங்கள் பல நடைமுறையில் உள்ளன. தோட்டத்தொழிலுக்கு இந்தியாவிலிருந்து அதிகளவான தொழிலாளர்கள் கொண்டு வரப்பட்டார்கள். இவ்வாறாக இந்தியாவிலிருந்து தொழிலாளர்களை கொண்டு வருவதற்கும் அவர்களுடைய நலன்களின் பொருட்டும் ஆட்சியாளர்களினால் பல்வேறு கட்டளைச் சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.இதனடிப் படையில் 1841 இல் 5ம் இலக்க முடைய 'கூலி மற்றும் சேவைகள் ஒப்பந்த கட்டளைச் சட்டம் 'முதலாவதாக உருவாக்கப்பட்டது.இதனைத் தொடர்ந்து பல்வேறு சட்டங்கள் தொழிலாளர்களின் நலன்கருதி உருவாக் கப்பட்ட போதும் இவற்றின் செயற்படுநிலை அல்லது நடைமுறைப் பயன்பாடுகள் திருப்திகரமானதாக இல்லை. இதனிடையே 2048 ஆகும் போது நாட்டை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றியமைக்க முடியுமான வகையில் தொழில் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது.தற்போதுள்ள தொழில்சட்டம் காலம் கடந்த சட்டமாகும்.இச்சட்டத்தின் ஊடாக தொழிலாளர்கள், முதலீட்டாளர்களுக்கு நலனோம்புகளை மேற்கொள்ள முடியாமல் இருப்பதுடன் நவீன காலத்துக்கு ஏற்ற வகையில் தொழில் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாமலுமுள்ளது. மேலும் தொழில் வாய்ப்புகளை அதிகரித்தல், தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாத்தல், நாட்டை அபி விருத்தி செய்ய முடியுமான வகையில் தொழிற்சாலைகளை ஏற்படுத்தல் போன்ற அனைத்து துறைகளும் உள்ளடங்கும் வகையில் தொழிலாளர் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டும். டிஜிட்டல் உலகிற்கு பொருத்தமான தொழிலாளர்களை உருவாக்குவதே இதன் நோக்கமாகும். தொழில் சட்டத் திருத்தம் உலகத் தொழிலாளர் அமைப்பு ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலேயே மேற்கொள்ளப்படும்.அதனால் அதற்காக பொதுமக்களிடம் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ள தீர்மானித்துள் ளதாகவும் அரசாங்கம் தெரிவித் துள்ளது.

'ஒவ்வொருவரும் உணவு, அடிப்படை

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## கொக்குத்தொடு ... தொடர்ச்சி ...

கட்சிகள் போதியளவுக்கு முன்னெடுக்கவில்லை என்பது தெரிகின்றது.

### சர்வதேச கண்காணிப்பு?

கொக்குத்தொடுவாய் பகுதியில் கடந்த 29ம் தேதி குழாய் நீர் பொருத்தும் பணிகளுக்காக பிரதான வீதியோரத்தில் நீர்வழங்கல் அமைச்சினால் குழியொன்று தோண்டப்பட்டுள்ளது. இதன் போது, பெண்களின் உள்ளாடைகள் மற்றும் மனித எச்சங்கள் என சந்தேகிக்கப்படும் எச்சங்கள் சிலவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதையடுத்து, பொலிஸார் இந்த சம்பவம் தொடர்பில் நீதிமன்றத்திற்கு விடயங்களை தெளிவூட்டியதுடன்,

குறித்த பகுதியில் மனித புதைக்குழி உள்ளதா என்பது தொடர்பிலான பூர்வாங்க அகழ்வு பணி கடந்த 6-ஆம் தேதி இடம்பெற்றது.

இதன்போது, குறித்த இடத்திலிருந்து 13 பேருடையது எனக் கருதப்படும் மனித எச்சங்களை அதிகாரிகள் அடையாளப்படுத்தியிருந்தனர். இந்த நிலையில், அடுத்தகட்ட நடவடிக்கைகளை எவ்வாறு முன்னெடுக்க முடியும் என்பது தொடர்பிலான விசேட கலந்துரையாடல் ஒன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. வியாழக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் சில முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன்படி எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை புதைகுழி மீண்டும் தோண்டப்படும். இந்தப் கணிகளின் தராதரம் குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டிருக்கின்றது.

சர்வதேச கண்காணிப்பாளர்களைப் பொறுத்தவரையில் அவ்வாறு யாரையும் தம்மால் அழைக்க முடியாது என நீதிபதி கூறியிருக்கின்றார். ஆனால், சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள் தாமாகவே இவற்றைக் கண்காணிப்பதற்கு வந்தால் அதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்றும் நீதிபதி தெரிவித்திருக்கின்றார். அதேவேளையில் அகழ்வுப் பணிகளில் தொல்லியல் துறையில் அனுபவம் வாய்ந்தவர்களை இணைத்துக்கொள்வதற்கும் நீதிபதி இணங்கியிருக்கின்றார்.

நீதிபதியின் இணக்கத்தின் அடிப்படையில் சர்வதேச பிரதிநிதிகளைக் கண்காணிப்பாளராகக் கொண்டுவருவதற்கான முயற்சிகளை தமிழத் தரப்பினரும் முன்னெடுக்க முடியும். இந்தப் புதைகுழிகளின் பின்னணியில் உள்ள மர்மங்களை வெளிப்படுத்துவதற்கு இவை உதவலாம்.

நடைபெற்றது ஒரு இனப்படுகொலை என்பது நிரூபிக்கப்படும் பட்சத்தில், அதன் அடிப்படையில் தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு ஒன்றுக்கு இலங்கையை நிர்ப்பந்திக்கும் அவசியம் சர்வதேசத்துக்கு உருவாகும்.

• • •

## பிச்சை வேண்டா ... தொடர்ச்சி ...

கிடைக்கவில்லை.இழக்கப்பட்ட அல்லது சூறையாடப்பட்ட சொத்துக்களுக்கு நட்ட ஈடும் வழங்கப்படவில்லை.கலவரத்தின் பின்னால் தமிழ் சமூகம் மிகப்பெரிய இழப்புக்கும், துரோகத்திற்கும் முகம் கொடுக்க நேர்ந்தது. இக்கலவரம் நடந்து 40 வருடங்கள் ஆகியுள்ள நிலையில் இதனால் பாதிக்கப்பட்ட பலர் இப்போது உயிருடன் இல்லை என்பதையும் கூறியாக வேண்டும்.

கொழும்பைச் சுற்றியுள்ள எல்லா இடங்களிலும் தமிழ் மக்களுக்கு இருந்த வீடுகள், கட்டிடங்கள், வர்த்தக நிலையங்கள் எல்லாம் நாசமாகி அது மாற்றானுடைய கையைச் சென்றடைந்தது.இது ஒரு மாபெரும் இழப்பாகும். இந்த இழப்பினை ஈடு செய்வதற்கு அரசாங்கம் எவ்வகையிலும் முன்வரவில்லை.40 வருடம் கடந்துள்ள நிலையில் எந்த அரசாங்கத்திற்கும் இது பற்றிய உணர்வு கூட இல்லை.ஆனாலும் இந்த விடயத்தை தமிழ் மக்கள் நினைவுகூற வேண்டும்.ஏனென்றால் எங்களுக்கு இழைக்கப்பட்ட அநியாயம் உலகம் உள்ளவரை தெரிந்திருக்க வேண்டும்.தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டதோடு , இனவாதிகளால் தூண்டப்பட்ட காடையர்கள் மாபெரும் அநியாயத்தை தமிழ் மக்களுக்கு புரிந்தார்கள்.இந்த விடயம் உலகுக்கு காட்டப்பட வேண்டும்.இதில் எவ்விதமான சந்தேகமும் இல்லை.நினைவுகூறல் நிச்சயமாக இடம் பெறுதல் வேண்டும்.

• • •

## முன்னர் ஒரு ... தொடர்ச்சி ...

குருந்தூர் மலையில் இன்று பொங்கல் வழி பாடுகளை மேற்கொள்ளலாம் என நீதிமன்றம் உத்தரவு அளித்திருந்த நிலையிலும் கூட பொங்கல் அடுப்பினை கற்பூரத்தை வைத்து மூட்டுகின்ற போது காவல்துறை உயர் அதிகாரி ஒருவர் தனது சப்பாத்து காலினால் அந்த கற்பூரத்தினை அணைத்துள்ளார் என தெரிவித்துள்ளார்.

இன்றையதினம் குருந்தூர் மலைக்கு சென்று பொங்கல் நிகழ்வில் கலந்து கொண்ட போது ஏற்பட்ட இடையூறு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே சித்தார்த்தன் இவ்வாறு தெரிவித்துள்ளார்

மேலும் "இந்த நாட்டில் அமைதி இருக்கக் கூடாது, இந்த நாட்டில் பௌத்த கலாச்சாரங்கள் தான் இருக்கின்றது எனக் காட்டுவதற்காக இந்த நிகழ்ச்சிகளை செய்து கொண்டிருக்கின்றார்கள். இதனை முழுமையாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே நாங்கள் எங்களால் இயன்ற அளவுக்கு முயற்சித்து இவைகளை நிறுத்துவதற்கு முயல்வோம்.

இந்தப் பகுதிகள் முழுமையாக அவர்கள் ஆக்கிரமிக்க கூடிய நடவடிக்கைகளை தடுப்பதற்காக ஊர் மக்களுடன் அனைத்துக் கட்சிகளும் ஒற்றுமையாக இருக்கின்றோம். ஆகவே நாங்கள் அனைவரும் முழுமையாக இதனை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நான் நினைக்கின்றேன் ஒரே ஒரு சாத்வீகமான வழி தான் தற்போது இருக்கின்ற வழி. அந்த வழியிலே நாங்கள் நிகழ்ச்சிகளை முன்னெடுத்து இதை மீண்டும் தமிழ் சைவ மக்களுடைய ஆலயமாக மாற்ற வேண்டும்" என்றார்.

## பிரான்ஸ் வன் ... தொடர்ச்சி ...

உருவாகியிருந்தன. இந்த வன்முறைகளை கட்டுப்படுத்து வதற்கு 45,000 காவல்துறையினர் பணி யில் ஈடுபடுத்தப்பட்டதுடன், 4000 இற்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களில் 1200 பேர் சிறுவர்கள்.

இதனிடையே, வன்முறைகளால் ஏற்பட்ட இழப்புக்கள் ஒரு பில்லியன் டொலர்களுக்கும் அதிகம் எனவும் இதில் சுற்றுலாத்துறைக்கு ஏற்பட்ட இழப்புக்கள் உள்ளடக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## உலகின் புதிய ... தொடர்ச்சி ...

தொழிநுட்பம் மலிவானதும், பாதுகாப்பானதும், மிகவும் வினைத்திறன் மிக்கதும் என தெரிவிக் கப்படுகின்றது.

இந்த தொழில் நுட்பத்தில் ஏவப்பட்ட செய்மதி உந்துகணை முயற்சி கடந்த வருடம் இறுதிப் பகுதியில் தோல்வி கண்டிருந்தது. தற்போது அது வெற்றிபெற்றுள்ளது.

இதே தொழில்நுட்டபத்தை நடைமுறைப் படுத்த அமெரிக்காவின் Relativity Space and SpaceX ஆகிய நிறுவனங்களும் முயன்றுவருகின்றன. ஆனால் SpaceX என்ற நிறுவனம் இந்த வருடம் ஏவிய ஏவுகணை தோல்வியில் முடிவடைந்திருந்தது.

சீனாவில் தனியார் செய்மதி நிறுவனங்கள் வேகமாக வளர்ச்சி கண்டு வருகின்றன. எதிர் வரும் 2030 ஆம் ஆண்டு சந்திரனுக்கு மனிதர்களை அனுப்பும் திட்டத்தையும் அது கொண்டுள்ளது.

## தமிழர்களின் ... தொடர்ச்சி ...

காரணிகள் ஊடுருவி தமிழ் தேசியத்தினை சிதைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கும் நிலைமைகள் ஏற்படாலம்.

எனவே தமிழ் தேசிய அரசியல் பரப்பில் அரசியல்செய்யும் தமிழ் தேசிய அரசியல் வாதிகள் இவ்வாறான நிலைமைகள் குறித்து கவனம் செலுத்தவேண்டும்.உண்மையில் இந்தியா வினை மீறி தமிழர்களுக்கான தீர்வு என்பது எட்டாக்கனி என்ற நிலையிருந்தாலும் இந்தியா வின் நலனுக்காக தமிழர்களின் உரிமைப்போராட்டத்தினை சீர்குலைக்கும் செயற்பாடுகளுக்கு யாரும் துணைநிற்ககூடாது என்பது எமது வேண்டுகோளாகும்.

• • •

## மத நூல்களை ... தொடர்ச்சி...

பல முஸ்லீம் நாடுகளில் ஆர்ப்பாட்ட பேரணிகள் நடைபெற்றிருந்தன.

இது ஒரு பொறுப்பற்ற செயல், மிகவும் தவறானது என ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழு வின் தலைவர் வோகர் ரேக் தனது உரையில் தெரிவித்திருந்தார்.

ஆனால் மத நூல்களை அவர்களின் ஆலயங்களின் முன் பாக எரிப்பது கருத்து சுதந்திரம் என அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் தெரிவித்துள் ளதுடன், தீர்மானத்திற்கு எதிராகவும் வாக்களித்திருந்தன.

கருத்து சுதந்திரத்தை மேற்குலக நாடுகள் தமக்கு சார்பாக தவறாக பயன்படுத்துகின்றன எனவும் அவர்கள் அவ்வாறு செய்வதை நிறுத்த வேண்டும் எனவும் இந்தோனேசியா வெளி விவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மௌனம் காப்பதும் குற்றத்துக்கு துணைபோவதேயாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தமிழ் மக்கள் ... தொடர்ச்சி...

முல்லைத்தீவு - கொக்குத் தொடுவாய் மனித புதைகுழி விவகாரம் தொடர்பில் சிறப்புக் கலந்துரையாடலில் பங்கேற்றபின் ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்து தெரிவிகையில், "யுத்தம் முடிந்த காலப் பகுதியில் வட்டுவாகலில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்கள், இராணுவத்தினரிடம் சரணடைந்த பெருமளவானவர்கள் இராணுவத் தினரின் பேருந்துகளில் ஏற்றப்பட்டு இவ்வாறான பிரதேசங்களுக்கு கொண்டு செல்லப் பட் டார்கள் என்ற செய்தி அந்த நாளில் இருந்தே வெளி வந்துகொண்டிருந்தது.

அவ்வாறான நிலைமையில் இந்த புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டிருப்பது பாரிய பதட்டத்தை எல்லோர் மத்தியிலும் ஏற்படுத்தி இருக்கிறது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் மற்றும் தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுக்கும் அரசியல் தரப்புகள் எல்லாம் இந்த அகழ்வானது சர்வதேச நியமங்களுக்கு அமைய சர்வதேச கண்காணிப்பின் கீழ் இடம்பெற வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

எங்களை பொறுத்தவரையில் உள் நாட்டிலே இலங்கை அரசாங்கம் மேற்கொள் கின்ற அகழ்வுகள் மூலமாக தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காது என்பது தான் எங்களுடைய அனுபவமாக இருக்கிறது" என்றார்.

## வாக்குறுதியும்... தொடர்ச்சி ...

வசதி, மருத்துவ கவனிப்பு, அவசியமான சமூக வேலைகள் உட்பட தமதும், தமது குடும்பத்தினரதும் உடல் நலத்துக்கும் நல் வாழ்வுக்கும், போதுமான வாழ்க்கைத் தரத்திற் கும் உரிமையுடையவராவர்.அத்துடன் வேலை யின்மை, இயலாமை, கைம்மை, முதுமை காரணமாகவும் அவை போன்ற அவரது கட்டுப்பாட்டுக்கும் அப்பாற்பட்ட பிற சூழ்நிலை காரணமாகவும் வாழ்க்கைக்கு வழியில்லாமை ஏற்படும் சந்தர்ப்பங்களில் பாதுகாப்பிற்கும் உரித்துடையவராவர் ' என்று ஒரு மனிதனின் வீட்டுரிமை குறித்து சர்வதேச மனிதவுரிமை சாசனம் வலியுறுத்துகின்றது. இலங்கை அரசியலமைப்பின் கீழ் வீட்டுக் கான உரிமை அரச வழிகாட்டி தத்துவக் கோட் பாடுகளிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அரசு இலங்கை பிரஜைகளில் வீடற்றோருக்கு நியாயமான வசதிகளுடன் கூடிய வீடுகளை அமைத்துக் கொடுக்கும் கடப்பாட்டினைக் கொண்டுள்ளதையும் கூறியாக வேண்டும். எனினும் பெருந்தோட்டப்புற மக்கள் இன்னும் லயத்து வாழ்க்கையையே வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையில் தனிவீட்டுக் கலாசாரம் ஆமை வேகத்தில் இடம்பெற்று வருகின்றது.' யானைப்பசிக்கு சோளப்பொறி 'என்றவாறு நிலைமைகள் தொடர்ந்த வண்ண முள்ளன.அரசாங்கம் கிராமப்புற மக்களை மையப்படுத்தி வீடமைப்பு நடவடிக்கைகளை விரிவுபடுத்தியதே தவிர பெருந்தோட்ட தொழிலாளர்களை மையப்படுத்தியதாக நட வடிக்கைகள் அமையவில்லை என்பது கசப்பான உண்மையாகும்.வீடமைப்பு தொடர்பில் வெறும் வாக்குறுதிகளால் மலையக மக்களை திருப்திப் படுத்த முனைந்த அரசாங்கம் நடைமுறையில் உருப்படியாக எதனையும் செய்ததாக இல்லை..

அடிப்படை தேவைகளுள் ஒன்றாக உறையுள் அல்லது வீடு காணப்பட்டபோதும் பெருந்தோட்ட தொழிலாளர்களைப் பொறுத்தவ ரையில் அது இன்னும் எட்டாக்கனியாகவே இருந்து வருகின்றது.லயன் வீடுகளை அமைக்கக்கூடாதென அரசாங்கம் ஏற்கனவே சட்டமியற்றியுள்ளது. தனித்தனி அல்லது இரட்டை வீடுகளை ஆரோக்கியமான வாழ்க் கைக்கு ஏற்ற முறையில் அமைக்குமிடத்து நிர்வாகம் பின்வரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்படும் என்று கருதியது. இதற்கேற்ப வீட்டு வசதிக்காக பெரும் முதலீடு ஒதுக்கப்பட வேண்டும்.தொழிலாளர்கள் மீதான மத்தியபடுத்தப்பட்ட கட்டுப்பாடு தளர்ந்துவிட நேரிடும் போன்ற அச்சங்கள் நிர்வாகத்திடம் காணப்பட்டன.இதனால் தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதிகளை அபிவிருத்தி செய்வதில் உரிய அக்கறையை வெளிப்படுத்தவில்லை. .

1971ம் ஆண்டு இடம்பெற்ற சமூக பொருளாதார அளவீட்டின்படி 85 சதவீதமான பெருந்தோட்டத் தொழிலாளர்கள் வாழ்ந்த வீடுகளில் 89 வீதமானவை லயன் வீடுகளே என்று தெரியவருகின்றது.இதேவேளை தோட்ட மக்கள் தொகையில் 50 வீதத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் ஒரு அறை மாத்திரம் கொண்ட வீடுகளிலேயே வாழ்ந்தனர். 1971இல் இரண்டு அறைகளைக் கொண்ட வீடுகளில் 33.3 வீதமான குடும்பங்களும், 1981/82இல் 45.4 வீதமான குடும்பங்களும் வாழ்ந்தனர்.1971இல் மூன்று அறைகளைக் கொண்ட வீடுகளில் 11.8 வீதமான குடும்பங்கள் வாழ்ந்தன.1971 - 1981 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பெருந்தோட்ட வீடுகளில் 8.1 வீதமானவை அழிவிற்குள்ளாகின. 2009ம் ஆண்டு தோட்ட உட்கட்டமைப்பு அபி விருத்தி அமைச்சின் கணிப்பின்படி இரண்டு இலட்சம் லயன் வீடுகளில் பெரும்பகுதி 150 வருட பழைமை வாய்ந்தவை என்று தெரியவருகின்றது.எனவே ஆட்சியாளர்கள் பெருந்தோட்ட மக்களின் வீட்டுரிமைக் கனவை மழுங்கடித்து அவர்களை நிர்க்கதி நிலைக்கு ஆளாக்கியுள்ளனர்.

இதைப்போன்றே சிறுவர் மற்றும் பெண்களின் உரிமைகளுக்கும் மலையகத்தில் ஆப்பு வைக்கப்பட்டுள்ளது.இந்நிலை தொடரு மானால் மலையக சமூகம் எதிர்காலத்தில் பல்வேறு சிக்கல்களுக்கும் முகம் கொடுக்க வேண்டிய அபாயநிலை மேலோங்கும் என்பதனை மறுப்பதற்கில்லை.இதனிடையே தோட்டத் தொழிலாளர்களுக்கான பல்வேறு உரிமைகளையும் அரசாங்கம் உறுதிப்படுத்தப் போவதாக அமைச்சர் ரமேஷ் பத்திரன உறுதியளித்துள்ளார்.அரசாங்கத்தின் இந்த வாக்குறுதி ஏட்டளவில் முற்றுப்பெற்றுவிடாது செயல்வடிவம் பெறவேண்டும் என்பதே சகலரி னதும் எதிர்பார்ப்பாகும்.

• • •

## சொந்த நாட்டி ... தொடர்ச்சி ...

தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் நாம் பொங்கல் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு சில நிபந்தனைகளை விதித்திருந்தனர்.

அந்தவகையில் தொல்லியல் பிரதேசத்திற் குள் 'தீ' வைக்க முடியாது எனக்கூறிய தொல்லியல் திணைக்கள அதிகாரிகள், நிலத்திலே கற்களை வைத்து பின்பு தகரங்களை வைத்து, அதன்மேல் கற்களை வைத்து, கற்களின்மேல் பானை வைத்து தீவைத்து பொங்கல் மேற்கொள்ள முடியுமென்ற நிபந்தனைகளுடன் பொங்கல் வழிபாட்டிற்கு அனுமதித்திருந்தனர்.




இந் நிலையில் தொல்லியல் திணைக் களத்தினுடைய நிபந்தனைகளுக்கு அமைவாக, பொங்கல் மேற்கொள்வதற்கான முயற்சிகளில் நாம் ஈடுபட்டோம். அப்போதும் அங்கிருந்த பெரும்பாண்மை இனத்தவர்களாலும், பௌத்ததேரர்களாலும் அங்கு எமது பொங்கல் வழிபாடுகளுக்கு குழப்பம் ஏற்படுத்தப்பட்டது.

இந் நிலையில் பௌத்த தேரர்களுக்கும், பெரும்பாண்மை இனத்தவர்களுக்கும் ஆதரவா கவே பொலிசாருடைய செயற்பாடுகள் காணப்பட்டன. பொலிசாருடைய செயற்பாடுகள் மிக மோசமாக காணப்பட்டன.

எங்களுடைய இடத்தில், எமது மக்கள், தமது வழிபாட்டினை மேற்கொள்ளமுடியாத நிலை காணப்படுகிறது. எமது மக்களின் வழி பாட்டுரிமை இங்கு மறுக்கப்பட்டது.

இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து பலதடவைகள் இந்த நாட்டிலே நடைபெற்றிருக் கின்றன. இருப்பினும் சர்வதேசநாடுகள்கூட தொடர்ந்தும் இவற்றை வெறுமனே பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றன.

இவ்வாறான கொடுமையான அரசாங் கத்தின் கீழ்தான் எமது மக்கள் வாழ்கின்றார்கள் என்பதை இந்த உலக நாடுகள் பார்க்கவேண்டும்.

இங்கே பொலிசார் எமது தமிழ் மக்களுடன் தள்ளுமுள்ளில் ஈடுபட்டனர். எமக்கெதிராக அடக்கு முறைகளைக் கையி ண்டனர். ஆனால் பௌத்த துறவிகளுக்கு எதிராகவோ, பெரும்பாண்மை மக்களுக்கு எதிராகவோ அவர்கள் அடக்கு முறைகளைக் கையாளவில்லை.

எம்மால் இங்கு பொங்கல் வழிபாடுகள் மேற்கொள்ள முடியவில்லை. ஆனாலும் நாம் இதனை இவ்வாறே விட்டுவிடப்போவதில்லை.

நாம் தொடர்ந்தும் இங்கு வந்து எமது வழிபாடுகளை மேற்கொள்வோம் - என்றார்

## இலங்கையின் ... தொடர்ச்சி ...

கொள்வனவு திறனைக் குறைத் துள்ளன.

அத்துடன், தாய்வழி ஊட்டச்சத்தை அதிகரிப்பதை நோக்கமாக கொண்ட, அரசாங் கத்தால் நிதியளிக்கப்பட்ட திட்டங்களும் நெருக் கடியால் பாதிக்கப்பட்டுள் ளன

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் தீவி ரம் காரணமாக, சுகாதாரம் மற்றும் போஷாக்கு என்பன பின்னடைவை சந்தித்துள்ளன.

கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் ஆரோக்கியத்தில் பாதிப்பு ஏற் பட்டுள்ளதாக சர்வதேச மன்னிப்பு சபையின் தெற்காசியாவிற்கான பிரதி பிராந்திய பணிப் பாளர் தினுஷிகா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

## உக்ரைனை ... தொடர்ச்சி ...

தொடர்ந்து வழங்குவது தொடர்பிலும் முடிவு கள் எட்டப்பட்டுள்ளது.

ஆனால் எந்த நிபந்தனையை உக்ரேன் பூர்த்தி செய்யவேண்டும் என்பது குறித்து தமக்கு எதுவும் தெரியாது என உக்ரேனின் வெளி விவகார அமைச்சர் தெரிவித் துள்ளர்.

உக்ரேன் தற்போது இணைக்கப்பட்டால் ரஸ்யா மீது நேட்டோ படையினர் நேரிடையான போரை மேற்கொள்ளவேண்டிய நிலை ஏற் படலாம் என்பதால் அமெரிக்கா அதனை தவிர்த்து வருவதாக மேற்குலக அவதானிகள் தெரிவித் துள்ளனர்.

இதனிடையே, கடந்த செவ்வாய்க்கிழமை (11) வெளியிடப்பட்ட அறிக்கையில் சீனா மீது நேட்டோ கடுமையான விமர்சனங்களை முன்வைத்ததற்கு எதிராக சீனா தனது கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளது.

ஆசிய பசுபிக் பகுதியை நோக்கிய நேட் டோவின் விரிவாக்கத்தை சீனா கடுமையாக எதிர்க்கும் எனவும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான சீனாவின் நடவடிக்கை பிரிவு தெரிவித்துள்ளது.

## எந்தவொரு ... தொடர்ச்சி ...

நிதியத்துடனான இலங்கையின் ஒப்பந்தங்களின் அடிப்படையில் கடன் மறுசீரமைப்பு உள் ளிட்ட ஒத்திசைவான பல திட்டங்கள் குறித்து கலந்துரையாடும் நோக்கில் நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். இவ்வாறானதொரு நிலையிலேயே சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் வோங் வென்பின் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இலங்கையில் முதலீட்டை அதிகரிக்கவும், ஒரு மண்டலம் ஒரு பாதை முன் முன்முயற்சி திட்டங்களை உருவாக்கவும் ஆர்வத்துடன் செயல்படுகிறோம். இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக சீன நிறுவனங்களை ஊக்குவிக்குறோம் என்றும் தெரிவித்துள்ளார்.

## ஒரு தலைமை … தொடர்ச்சி …

நாம் ஐம்பதாயிரம் மாவீரர்களையும், மூன்றரை இலட்சம் தமிழ்மக்களையும், ஆயிரக்கணக்கான வேறு இயக்கப்போராளிகளையும் பலி கொடுத்து விட்டு இன்று நிலந்தரமான ஒரு சமஷ்டி அடிப்படையிலான தீர்வை வலியுறுத்துமாறு பாரதப்பிரதமர் மோடிக்கு தற்காலிக தீர்வாக 13, வது திருத்தத்தை தாருங்கள் என ஒரு எழுத்து மூலமான ஆவணமாக ஆறு தமிழ்தேசிய கட்சி தலைவர்கள் கையொப்பம் இட்டு மோடிக்கு கடிதம் அனுப்புவது இலங்கை ஜனாதிபதி ரணிலை திருப்திப்படுத்தவா? அல்லது பாரதப்பிரதமரை திருப்திப்படுத்தவா? என்பதை மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

13, வது தீர்வுத்திட்டம் பற்றி வாயால் கதைப் பதும் வாய்மூலமாக வலியுறுத்துவதும் தப்பில்லை ஆனால் எந்த தீர்வாக இருந்தாலும் ஒரு சர்வதேச நாட்டுத்தலைவர்களிடம் எழுத்து மூலமான கோரிக்கைகள் வலுவானதாக இருக்கவேண்டும்.

இலங்கை அரசு ஜனாதிபதி ரணில் சமஷ்டியை தரமாட்டார் என்பதற்காக அவரை திருப்திப்படுத்த உப்பு சப்பு இல்லாத 13,வது அரசியல் திருத்தத்தை கேட்டு கடிதம் எழுதுவது உண்மையில் மண்ணில் மாண்ட மாவீரர்களுக்கும், மண்ணில் உயிர்நீத்த இலட்சக்கணக்கான மக்களுக்கும் நாம் செய்யும் துரோக்கமாவே அமையும்.

எனவே எப்போதும் தமிழ்தேசிய கட்சிகள் எமது உரிமைக்கான இறுதி தீர்வு தற்போது இலங்கையில் சட்டரீதியாக எல்லோரும் உச்சரிக்க தடையில்லாத சமஷ்டித்தீர்வை வலியுறுத்தும் இராஜதந்திர அரசியலை மட்டுமே அனைத்து தமிழ்தேசிய கட்சிகளும் மேற்கொள்வதே இன்றய தேவை.

• • •

## இனச்சிக்கலுக்கு... தொடர்ச்சி ...

வேண்டும். ஆனால், தமிழ்நாட்டில் அப்படி கோரிக்கையை எழுப்பக்கூடிய உள்ளார்ந்த அரசியல் வளர்ச்சி நிலை இல்லை. 1971 ஆம் ஆண்டை ஒட்டி வங்கதேசத்தில் பாகிஸ்தான் அரசப் படையினர் நடத்திய போர்க்குற்றங்களில் இருந்து தென்னாசியப் பகுதியில் பெரிய விழிப்புணர்வு ஏற்பட்டிருக்க முடியும். ஆனால், உலகளாவியப் போராட்டங்களில் இருந்து சீரிய படிப்பினைகளைத் தொகுத்து உள்வாங்கி, உட்செரித்து, தீர்மானம் எடுக்கும்போது அவற்றைப் பொருத்தி செயல்படும் பாங்கும் பண்பாட்டும் இன்றளவும் வளரவில்லை.

2011 ஆம் ஆண்டு இளந்தமிழகம் சார்பாக ( அப்போது சேவ் தமிழ்ஸ் என்ற பெயரில் செயல்பட்டது) “போர்க்குற்ற வரலாற்றில் இராஜீவ் காந்தியும் இராசபக்சேவும்’ என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கம் நடத்தினோம். அப்போதே, இந்தியப் படைக்கு எதிராகவும் அதன் அரசியல் தலைமை இராஜீவ் காந்திக்கு எதிராகவும் பொறுப்புக்கூறல் முன்னெடுப்புகளை செய்திருக்க வேண்டும் என்று அந்தக் கருத்தரங்கில் பேசப்பட்டது. அது ஈழத் தமிழரின் விடுதலை அரசியலுக்குப் பெரிதும் உதவியிருக்கும்.

ஈழத் தமிழரைப் பொறுத்தவரை அவர்களுக்கு எதிரானப் படுகொலைகள் யாவும் தமிழீழ தனியரசுக் கோரிக்கைகான நியாயத்தை மீள் உறுதி செய்தன. அவையாவும் ஆயுதப் போராட்டத்திற்கு வலுசேர்ப்பதற்கு வழிவகுத்தது. அதேநேரத்தில், ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஆயுதப் போராட்டம் தவிர்த்த ஏனைய அரசியல் போராட்டங்கள் மிகவும் அருகிப் போயிருந்தன. ஆயுத போராட்ட வடிவம் மட்டுமே ஒற்றை வடிவமாகப் பாவிக்கப்பட்டது. பிராந்திய, உலகளாவிய வல்லரசுகளும்கூட ஆயுதப்போராட்டத்திற்கே ஆதரவு கரம் கொடுத்தன. ஈழ விடுதலைப் போராட்டத்தில் மேலோங்கி இருந்த இராணுவாதக் கண்ணோட்டம் இவற்றுக்கு காரணமாய் இருந்தது என சொல்லலாம்.













அதேநேரத்தில் இனவழிப்பில் இருந்து தற்காத்துக் கொள்ளத்தக்க தமிழீழ தனியரசு என்பது சூலைப் படுகொலைக்கும் அமைதிப் படையின் அட்டூழியங்களுக்கும் முள்ளிவாய்க்கால் படுகொலைகளுக்கும் ஈடுசெய்யக் கூடிய நீதியாக அமைய முடியும்.

அதிலும் தமிழர்களால் வெற்றிப்பெற முடியவில்லை. காலமும் இடமும் இணைந்த வரலாற்று சூழமைவினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள தமது வரப்புகளைக் கருத்தில் கொண்டு, மாறுகின்ற சர்வதேச நிலைமைகளைக் கருத்தில் எடுத்து, இப்போராட்டத்தின் குறிப்பான சர்வதேச, பிராந்திய தலையீடுகளையும் ஆதிக்கப் போட்டி அரசியலையும் கருத்தில் எடுத்து, அவற்றைக் கையாளவல்ல அரசியல் உத்திகளைக் கடைப்பிடிக்கத் தவறியமை இந்நாள்வரை சிந்திய குருதிக்கும் இழந்த உயிர்களுக்கும் சிதைந்த வாழ்வுக்கும் ஈடுசெய்யவல்ல நீதியைப் பெறமுடியாமல் போனதற்கான முதல்காரணமாக சொல்லலாம்.

அகக் காரணங்களாக சமய, வட்டார வேறுபாடுகளைக்கடந்து தமிழ்த் தேசிய ஓர்மைக் கூடாக வலுவான தமிழ்த்தேசிய அடித் தளத்தை உருவாக்குவதில் உள்ள இடை வெளிகளும்கூட தமிழர்கள் இன்னும் குருதி சிந்திக் கொண்டிருப்பதற்கு வழிவகுத்துள்ளது.

• • •

## 13 ஐ நடைமுறை ... தொடர்ச்சி ...

இந்தியாவுக்கு, சீனாவைக் கொண்டு வரக்கூடாது என்பதே முக்கியம்.ஆனாலும் இந்தியாவால் ரணில் மீது எத்தகைய அழுத்தங்களையும் பிரயோகிக்க முடியாது.

உலகத்தில் இரண்டு தலைவர்கள் உள்ளனர்.அவர்கள் எப்படியான காய்நகர்த்தலை மேற்கொள்வர் என்று யாராலும் கூறமுடியாது. அவர்களில் ஒருவர் ரணில்.மற்றவர் ரஷ்யாவின் புடின்.காய்நகர்த்துவதில் இவர்கள் மிகவும் வல்லவர்கள்.ரணில் விடயத்தில் இந்தியாவால் பெரிதாக எதையும் செய்ய முடியாது என்றே கருதுகின்றேன்.

**தமிழரசு கட்சியுடன் இறுதியாக நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இடைக்கால நிர்வாக சபை என்ற யோசனையையும் ஜனாதிபதி முன்வைத்திருந்தார். இதன் பிண்ணனியில் அவரிடம் இருந்த தந்திரோபாயம் என்ன?**

ரணில் இன்று மாகாண சபை தேர்தலை நடத்தக் கூடிய நிலையில் இல்லை.எந்த தேர்தலையும் நடத்தும் உத்தேசம் இல்லை.சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்கும் கிடையாது.தேர்தல் இடம்பெற்றால் பலவீனமாக சூழல் உருவாகும். இதனால் தேர்தலை நடத்த அவர் விரும்பவில்லை. தேர்தலை தவிர்க்க மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும்.மாற்று ஏற்பாடாகத்தான் மாகாண சபைகளுக்கு ஒரு இடைக்கால நிர்வாகத்தை அவர் முன்மொழிய விரும்புகின்றார்.

வடக்கு கிழக்கிலே இருக்கின்ற முழு தமிழ் மக்களுக்காக ஒரு இடைக்கால நிர்வாகத்தை நாம் கோர வேண்டிய தேவையுள்ளது.ஏனென்றால் இப்போதைக்கு அரசியல் தீர்வு சாத்தியமில்லை. எனவே மக்களின் நலன்களை பாதுகாக்க இடைக்கால நிர்வாகம் தேவைப்படுகிறது.எனவே வடக்கு கிழக்கு வாழ் முழு தமிழ் மக்களுக்கான இடைக்கால நிர்வாக கோரிக்கையை தமிழ் தரப்பு முன்வைக்க வேண்டும்.எனினும் தமிழ் கட்சிகள் இதற்கான நடவடிக்கைகளில் இதுவரை இறங்கவில்லை. தூக்கத்தில் தான் இருக் கின்றார்கள்.

**வடக்கு கிழக்கில் புதைகுழிகள் தோண்டப்படும் நிலைமை தொடர்ந்தும் காணப்படுகின்றது.அண் மையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதைகுழியொன்று தோண்டப்பட்டு 13 க்கு மேற்பட்ட சடலங்கள் இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.சர்வதேச கண்கா ணிப்புடன்தான் இந்த புதைகுழி தோண்டும் நடவடிக்கைகள் இடம்பெற வேண்டுமென சில தரப்பினர் வலியுறுத்தி இருக்கின்றார்கள். இதற்காக எவ்வாறான நடைமுறைகள் கையாளப்பட வேண்டுமென நீங்கள் கருது கின்றீர்கள்?**

உண்மையில் இந்த சடலங்களுக்கும் ஏற்கனவே போர் நிலைமைகளுக்கும் ஒரு நெருக்கமான தொடர்புள்ளதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. அரசாங்கத்தின் ஊடாக புதைகுழி அகழ்வுகள் இடம்பெறுமாக இருந்தால் அது தமிழ் மக்களுக்கு நீதியை பெற்றுத் தராது.சர்வதேச கண்காணிப்பின் ஊடாக அகழ்வுகளை மேற்கொள்வதற்கும் விசாரணைகளை நடாத்துவதற்கும் நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை வலியுறுத்த தமிழ் தரப்பு தயாராக இருக்க வேண்டும்.இதன் மூலம் இன அழிப்பு உறுதிப்படுத்தப்படும் இடத்து அது தீர்வுக்கு உந்துசக்தியாக அமையும்.தமிழ் தரப்பு இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

• • •



## அன்பு நேயர்களுக்கு!

எமது எதிர்கால சிற்பிகளான தமிழ் சிறார்களின் தமிழ்மொழி மற்றும் பண்பாட்டு மேம்பாட்டினை இலக்காக கொண்டு வெளிவரும் இலக்கு வார இதழின் சிறுவர் தளத் திற்கான தங்கள், ரைகள், கவிதைகள், ஓவியங்கள் மற்றும் வாழ்வுக்கு வழிகாட்டும் தமிழர் நாகரீகம் தொடர்பான சிறு குறிப்பு கள் ஆகியவற்றை பகிர்ந்து ஓர் செழிப்பான நிலைத்த எதிர்கால தமிழ் சந்ததியை உருவாக்க இணையுமாறு இலக்கு உங்களை வரவேற்கிறது!

தொடர்புகளுக்கு : info@ilakku.org

எமது வாழ்க்கை சமுத்திரம் போன்றது ஏனெனில் அதன் முடிவை எம்மால் காண முடியாது .... அதே போல் தான் வாழ்க்கையின் முடிவையும் எம்மால் கூற முடியாது.......

எவ்வாறு ஒரு கப்பல் சமுத்திரத்தின் முடிவை நோக்கி செல்கின்றதோ , அதே போல் தான் நாமும் எமது வாழ்க்கையின் இலக்கை நோக்கி செல்ல வேண்டும்......


சமுத்திரத்தில் எம்மை காப்பாற்றும் டொல்பின்களும் உண்டு , நம்மை கொள்ளும் திமிங்கலமும் உண்டு ......

அதே போல் எமது வாழ்வை நோக்கிய பயணத்தில் நன்மை அளிப்பவர்களும் உண்டு, அதனை எதிர்ப்பவர்களும் உண்டு......

நாம் தான் நல்லதை எடுத்து தீயதை எதிர்த்து போராட வேண்டும்....

திமிங்கலத்தை பார்த்து பயந்தால் எம்மால் சமுத்திரத்தின் முடிவை அடைய முடியாது, அதேபோல் எதிர்ப்புக்களை எதிர்க்காவிட்டால் எம்மால் வாழ்வின் இலக்கை அடைய முடியாது............

**சு.திகழினி** தி/செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயம்



## புரியாத புதிராய் ஓர் சிறைச்சாலை...

**தப்பிக்க வழி தெரிந்தும் அதை செயற்படுத்த தயங்கும் பெண் இனம்...**

**கேட்கப்படாத கேள்விகள் ஆயிரம் துணிந்து கேட்டு விட்டால் எங்கோ தன் ஆண் கர்வம் ஒரு படி இறங்கி விட்டால் சிறைச்சாலை தகர்ந்து விடுமோ!! என்ற பயம்....**

**கட்டி காப்பாற்றிய நியதி அல்லவா!!!**
**படைத்தவனும் உருவாக்கிய உலக நியதியோ!!!**
**அவன் தான் சிறையின் உரிமையாளனோ!!**

**தியா** தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி

## இராவணனின் குட்டி புகழ்

தென்னிலங்கை நாடாம் தேன் பாடும் ஊறாம் ........
இராவணனின் பெருமை இப்போ யார் அறிவர் .......
திரும்பும் கோணமெல்லாம் மலையாம், திருக்கோணேஸ்வரத்தில் இரா வணன் வெட்டாம், கன்னியாவில் வெந்நீருற்றுக் கிணறுகளாம், இதை அனைத்தையும் கொண்டமைந்த திருகோணமலையாம், இவ் அனைத்து புகழுமே இராவணனைச் சாரும்......

**சு.துவாகீஸ்** தி/விபுலானந்த கல்லூரி

